வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ———— ඊළනාඩු





Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 24.06.2024 திங்கட்கிழமை இதழ் : 176 பக்கங்கள் : 12

# புலிகள் மீதான தடையை நீக்க பிரித்தானியா மறுப்பு!

லண்டன், ஜூன் 24

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின்மீதான தடையை நீக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை பிரித்தானியா நிராகரித்துள்ளது.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தடை செய்யப்பட்ட அமைப்புகளின் மேன்முறையீட்டு ஆணையத்திடம் முன்வைத்திருந்த இந்தக் கோரிக்கை கடந்த வெள்ளிக்கிழமை நிராகரிக்கப்பட்டது.

அகிம்சை வழியில் தனது அரசியல் மற்றும் சித்தாந்த இலக்குகளை அடைய முயல்வதால் இங்கிலாந்தில் விடுதலைப் புலிகள் அமைப்பின்மீதான தடையை நீக்க வேண்டும் என்று நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தனது கோரிக்கையில் தெரிவித்திருந்தது.

விடுதலைப் புலிகள் அமைப்பு அதன் தாயகத்தில் தோற்கடிக்கப்பட்டாலும் சர்வதேச மட்டத்தில் இன்னமும் அதன் 11

## புலிகள் மீதான தடையை பிரித்தானியா தொடரும்!

### வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி

கொழும்பு, ஜூன் 24

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை பிரித்தானியா தொடர்ந்தும் கடைப்பிடிக்கும் என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடையை நீக்குமாறு நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் பிரித்தானியாவின் தடைசெய்யப்பட்ட அமைப்புகளின் மேல்முறையீட்டு ஆணையத்தை கோரியது. தடையை நீக்க அந்த ஆணையம் மறுத்து விட்டது. இது தொடர்பிலேயே தனது எக்ஸ் தளத்தில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி பதிவிட்டுள்ளார். 11

தாய், சிறியதந்தை துன்புறுத்தல்

## யாழ். பொலிஸ் நிலையத்தில் கொழும்பு சிறுவன் தஞ்சம்!

யாழ்ப்பாணம், ஜூன் 24

தனது தாயரும் சிறிய தந்தையும் (தாயின் இரண்டாவது கணவர்) தன்னை அடித்துத் துன்புறுத்துகின்றனர் என்றுகூறி யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் சிறுவன் ஒருவன் தஞ்சம் புகுந்துள்ளார்.

கொழும்பை சேர்ந்த 16 வயதான அந்தச் சிறுவன் வீட்டை விட்டு வெளியேறி யாழ்ப்பாணம் வந்தார் என்றும் இங்கு எவரையும் தனக்கு 11

## தமிழ் பொது வேட்பாளர்

# ஐ.த.தே. கூட்டணி இன்று கூடி முடிவு!

யாழ்ப்பாணம், ஜூன் 24

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி இன்று கூட்டு முடிவை எடுக்கவுள்ளது. அத்துடன், இந்தக் கூட்டத்தில் 'தமிழ் மக்கள் பொதுச் சபை'யுடன் இணைந்து செயல்படுவது குறித்தும் அந்தக் கூட்டணி தீர்மானிக்கவுள்ளது என்று தெரிய வருகின்றது.**

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஒருங்கிணைப்பு குழு கூட்டம் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு வவுனியாவில் தனியார் விடுதியில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்திலேயே இந்த முடிவுகள் எடுக்கப்படவுள்ளன.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியிலுள்ள தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), தமிழீழ மக்கள் விடுதலை கழகம் (புளொட்), ஈ. பி. ஆர். எல். எவ்., தமிழ்த் தேசியக் 11

## ஆசிரியர்கள் புதனன்று தொழிற்சங்க போராட்டம்!

இலங்கை ஆசிரியர் சங்கம் நாளை மறுதினம் புதன்கிழமை திட்டமிட்டவாறு சுகயீன விடுமுறை போராட்டத்தில் ஈடுபடும் என்று அந்த சங்கத்தின் உபதலைவர் தீபன் திலீசன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அவரின் இல்லத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு மேலும் 11

## தமிழ்நாட்டின் பகுதியாக இலங்கை மாறும் அபாயம்!

### இப்படி அஞ்சுகிறார் கர்தினால் ரஞ்சித்

கொழும்பு, ஜூன் 24

இந்தியா - இலங்கை இடையே பாலம் அமைக்கப்பட்டால் தமிழ்நாட்டின் ஒரு பகுதியாக இலங்கை மாறிவிடும் என்று அச்சம் தெரிவித்திருக்கிறார் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்.

கேகாலை - ருவன்வெல்லவில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் மேலும் தெரிவித்தவை வருமாறு,

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே உத்தேச பாலத்தின் ஊடாக எதிர்காலத்தில் 11



## பொருளாதாரத்தை வளர்க்கவே நாட்டை நான் பொறுப்பேற்றேன்!

### மட்டக்களப்பில் ஜனாதிபதி தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூன் 24

நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பவே தாம் நாட்டை பொறுப்பேற்றார் என்று தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் விவசாயிகளின் வாழ்விலும் புதிய மாற்றம் ஏற்படும் என்றும் அவர் கூறினார்.

மட்டக்களப்பு - கரடியனாறு பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட நிலக்கடலை பதப்படுத்தும் நிலையத்தை நேற்று திறந்துவைத்து உரையாற்றியபோதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

"இது விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் 11

## ஐ. எம். எவ்வின் அறிக்கைக்கு மறுநாள் ரணிலின் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 24

சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ. எம். எவ்.) விசேட அறிக்கை ஒன்று இந்த வார இறுதியில் வெளியாகும். இதைத் தொடர்ந்து மறுநாளே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களுக்கு விசேட உரையாற்றுவார் என்று தெரிய வருகின்றது.

இதனிடையே, இந்த வாரத்தில் எதிர்க்கட்சிகளை சேர்ந்த சிலர் ஜனாதிபதி தேர்தலுக்கான பிரசாரத்தில் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவாக பிரசாரம் செய்வர் என்றும் கூறப்படுகின்றது. ஐக்கிய மக்கள் சக்தியின் ராஜித சேனாரத்ன, இந்த வாரத்தில் 11

## அதானி நிறுவனத்தின் அனுமதி இடைநிறுத்தம்

கொழும்பு, ஜூன் 24

மன்னார், பூநகரி பிரதேசங்களில் இந்தியாவின் அதானி நிறுவனத்துக்கு 480 மெகாவாட்ஸ் காற்றாலை மின் நிலையங்களை அமைக்க வழங்கப்பட்ட அனுமதி இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் 11

## இன்று வழமைபோன்று பாடசாலைகள் இயங்கும்!

### கல்வி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 24

நாடளாவிய ரீதியில் சகல பாடசாலைகளிலும் இன்று திங்கட்கிழமை வழமை போன்று கற்பித்தல் செயல்பாடுகள் நடைபெறும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பாடசாலைகளின் கல்வி சாரா ஊழியர்கள் இன்றும் நாளையும் சுகயீன விடுமுறை போராட்டத்தை அறிவித்துள்ளனர். இந்த நிலையிலேயே 11

## உருக்குலைந்த நிலையில் மூதாட்டியின் சடலம் மீட்பு

வடமராட்சி, ஜூன் 24

வடமராட்சி - திக்கத்தில் சில நாட்களின் முன் உயிரிழந்த குடும்பப் பெண் ஒருவரின் சடலம் உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்டது.

75 வயதான மயில்வாகனம் பாலபரமேஸ்வரி என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

உயிரிழந்த பெண்ணின் கணவர் வவுனியாவை சேர்ந்தவர். அவர்களுக்கு ஒரேயொரு மகள் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

அண்மையில் ஒரு முக்கிய நபரிடம் கேட்டேன், "தெற்கில் நிலைமைகள் எப்படியிருக்கின்றன? யார் அடுத்த ஜனாதிபதியாக வருவார் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?" என்று.

அவர் இந்த நாட்டில் நடக்கும் ஒவ்வொரு சம்பவங்களையும் கவனிக்கும் ஒருவர் என்பதால் அவரிடம் கருத்தை அறிவது நல்லது என்பது எனது எண்ணமாக இருந்தது.

அவர் சொன்னார், "ஜூலை கடைசியில் வேண்டுமானால் கேளுங்கள் - ஓரளவுக்கு சொல்லக்கூடியதாக இருக்கும். ஆனால், இப்போது சொல்வது சற்றுக்கடினம்."

விளக்கமாக அறியும் ஆவல் எனக்கு - "இப்போது நிலைமை எப்படி என்றேன்?"

அவர் தெளிவாக சொன்னார், "கடைசிக் கட்டங்களில் நடக்கும் கட்சித் தாவல்கள், நமது பக்கத்து நாடு யாரை ஆதரிக்கப்போகின்றது என்ற விடயங்கள் போன்றவை தேர்தல் முடிவுகளில் தாக்கத்தை ஏற்படுத்தும்"- என்றவர், "ரணிலிடம் இருந்து மற்றப் பக்கத்துக்கு செல்வதற்கு அவரிடம் ஆட்கள் இல்லை என்பதால், சஜித் தரப்பிலிருந்துதான் ரணில் பக்கம் கட்சித் தாவல்கள் நடக்கலாம்" - என்றார். அத்துடன், "எதற்கும் கொஞ்சம் பொறுத்திருங்களேன்", என்றார்.

பக்கத்து நாடு, சஜித் தரப்பையும் ரணில் தரப்பையும் ஓரணியில் கொண்டுவர எடுத்த முயற்சி பெரும்பாலும் தோல்வியை நோக்கியே சென்று கொண்டிருக்கின்றது என்பதால் இனி யாரை ஆதரிப்பது என்பதை அவர்கள் முடிவெடுக்கலாம்.

அவர்களைப் பொறுத்தவரை - யார் ஆட்சிக்கு வந்தாலும் அவர்களை எப்படி கையாள்வது என்பது தெரிந்ததுதான். ஆனாலும் மாலைதீவில் நடந்ததுபோல ஏதேனும் இடக்குமுடக்காக நடந்துவிட்டால்...? என்பதிலும் அவர்கள் கவனமாக இருக்கின்றனராம். இதனால் தமது விருப்பம் என்ன என்பதை மக்கள் புரிந்து கொள்ளக்கூடியவாறு வெளிப்படுத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, அந்த பிரமுகர் சொன்னதுபோலவே, சஜித் தரப்பிலிருந்து சிலர் ரணில் பக்கம் செல்வதற்கும் தயாராகி வருகின்றனர் என்ற செய்திகள்தான் இப்போது அரசல்புரசலாக வருகின்றன.

சஜித் கட்சியின் தவிசாளராக இன்றும் இருக்கும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, களுத்துறையில் தனக்கென்று சில பத்து ஆயிரம் வாக்குகளை வைத்திருக்கும் ராஜித சேனாரத்ன போன்றவர்கள் கட்சி தாவுவது ஓரளவுக்கு உறுதியாகிவிட்டாலும்கூட கட்சிக்கு ஆட்களைப் பிடிப்பதற்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டவர்கள் தொடர்ந்து தமது முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றனர் என்கின்றன தெற்கில் இருந்து கிடைக்கும் செய்திகள்.

தமது அரசாங்கத்துடன் இணைந்தால் பத்து ஏக்கர் நிலம் தரலாம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஒருவருக்கு அரசாங்க தரப்பில் இருந்து பேரம் பேசப்பட்டுள்ளதாக சிங்கள வார ஏடு ஒன்று அண்மையில் செய்தி வெளியிட்டிருந்தது.

"சமீபத்திய அரசியல் வட்டாரங்களின்படி, ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து ஆட்களை தமது பக்கத்துக்கு இழுக்கும் முயற்சி பெருவெற்றி பெறவில்லையென்றாலும் அவர்கள் தமது முயற்சியை கைவிடவில்லை" என்கின்றது அந்தப் பத்திரிகை செய்தி.

கேகாலை தொகுதி ஒன்றை பிரதிநிதித்துவப்படுத்தும் எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவரும் கட்சி மாறப்போகிறார் என்று அடிக்கடி கூறப் பட்டு வந்தது. ஆனால், அவரை அணுகிய அரச தரப்பு பிரதிநிதி ஒருவர், "அரசாங்கத்துக்கு வந்தால் பத்து ஏக்கர் நிலம் காணிக்கையாகக் கிடைக்கும்" என்று சொல்லியிருக்கிறார்.

இது அந்த பிரமுகருக்கு பலத்த கோபத்தை உண்டாக்கியது. பரம்பரை ரீதியாக மிகவும் வசதியான ஒருவரான அந்தப் பிரமுகர் இதனைக் கேட்டு கடுப்பானதுடன், "என்னிடம் இல்லாத காணியா? யார் யாரிடம் எதனைக் கொடுக்க முன்வரவேண்டும் என்பதைக் கூட அறியாதவர்களை இப்படி பேரம் பேச அனுமதித்திருக்கிறார்களே" என்று நொந்து கொண்டாராம்.

"என்னுடைய பெறுமதி பத்து ஏக்கர் நிலமாக மாறிவிட்டது." என்று கடிந்து கொண்ட அவர், இந்தத் தகவலை உரியவரிடமே முறையிட்டிருக்கிறாராம்.

அரச தரப்பில் நடக்கும் இதுபோன்ற முயற்சிகளுக்கு மத்தியில், ஐக்கிய மக்கள் சக்தி தரப்பிலும் இதனை தடுக்கும் முயற்சிகளில் கவனம் செலுத்த கட்சியின் செயலாளரையே பொறுப்பாகக் களம் இறக்கியிருக்கிறார்களாம்.

கட்சியிலிருந்து வெளியேறக் கூடியவர்களை அவ்வாறு வெளியேறாமல் தடுக்கின்ற இந்த முயற்சிக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவே பொறுப்பாக நியமிக்கப்பட்டிருக்கின்றாராம்.

கடந்த காலத்தில் கட்சிமீது சற்று கோபத்தில் இருந்தவர்களுடன் அவர், தனித்தனியாக சந்தித்து பேச்சு நடத்தத் தொடங்கியிருக்கிறார் என்கின்றன ஐக்கிய மக்கள் சக்தி வட்டாரங்கள்.

இதற்கிடையில் ஐக்கிய மக்கள் சக்தியில் பிரச்னைகளை கிளப்பி வருபவர்களை மிக விரைவில் அடக்க வேண்டும் என்ற கருத்தையும் மூத்த தலைவர்கள் முன்வைத்துள்ளனர் என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

- ஊர்க்குருவி.

## காசா சிறுவர் நிதியத்துக்கு ஒரு கோடி ரூபாய் நன்கொடை!

காத்தான்குடி, ஜூன் 23

காசா சிறுவர் நிதியத் துக்கு ஒரு கோடியே 7 இலட்சத்து 69 ஆயிரத்து 417 ரூபாயை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நன்கொடையாக புதிய காத்தான்குடி பெரிய ஜும்மா பள்ளிவாசல் வழங்கி யுள்ளது.

இஸ்ரேல் - காசா போரில் பாதிக்கப்பட்ட காசா மக்களுக்கு உதவுவதற்காக காசா சிறுவர் நிதியம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணத்தில் நிறுவப்பட்டது.

இரு நாள் பயணமாக மட்டக்களப்பு சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று ஞாயிற்றுக்கிழமை காத்தான்குடிக்கு சென்றார். காத்தான்குடி பெரிய ஜும்மா பள்ளிவாசலுக்கு சென்ற ஜனாதிபதியிடம் பள்ளிவாசல் நிர்வாகம் காசோலையை கையளித்தது. (ஐ)

## ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் கருத்துக்கணிப்பில் கட்சிகள்!

கொழும்பு, ஜூன் 24

ஜனாதிபதித் தேர்தல் திகதி நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில் அனைத்து ஜனாதிபதி வேட்பாளர்களும் மக்களின் கருத்தை அறிய கருத்துக் கணிப்புகளை ஆரம்பித்துள்ளனர் என்று தெரிய வருகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் நாடளாவிய ரீதியில் தனது கருத்துக் கணிப்பை ஆரம்பித்துள்ளதாக அரசாங்கத்தின் நம்பகமான தகவல்கள் தெரிவிக்கின்றன. அந்த நடவடிக்கைகளுக்காக புலனாய்வு துறை அதிகாரிகள் குழுவும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இந்த கணிப்புகள் அனைத்தும் மாவட்ட அளவில் நடத்தப்படுகின்றன.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதா வேண்டாமா என்பதை கருத்துக் கணிப்பு முடிவுகளை கவனமாக ஆராய்ந்த பின்னரே ரணில் விக்கிரமசிங்க தீர்மானிப்பார் என்று தெரிய வருகின்றது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்காக ஒவ்வோர் அரசியல் கட்சியும் இவ்வாறான கருத்துக் கணிப்பை நடத்தி வருகின்றது. (ஐ)

## பெண்ணின் காரை மோசடியாக உரிமம் மாற்ற முயன்றவர் சிக்கினார்!

யாழ்ப்பாணம், ஜூன் 24

வெளிநாட்டில் வசிக்கும் பெண்ணொருவரின் சொகுசு காரை மோசடியான முறையில் உரிமம் மாற்றம் செய்ய முயன்ற குற்றச்சாட்டில் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த பெண்ணொருவர் தனது பெயரில் சொகுசு கார் ஒன்றை கொள்வனவு செய்து அதற்கு சாரதி ஒருவரையும் நியமித்துள்ளார்.

தற்போது அவர் வெளிநாட்டில் வசித்து வரும் நிலையில் வாகனத்துக்கு இந்த ஆண்டுக்கான வரி அனுமதிப் பத்திரம், புகை பரிசோதனை செய்வதற்கு வாகன பதிவு புத்தகம் உள்ளிட்ட ஆவணங்கள் தேவை எனக் கூறி வெளிநாட்டில் வசிக்கும் பெண்ணிடம் அவற்றை பெற்றுள்ளார்.

வாகன பதிவு புத்தகம் உள்ளிட்ட ஆவணங்களை கொண்டு காரை தனது பெயருக்கு மாற்றம் செய்ய முயற்சித்துள்ளார். இந்த விடயம் வாகன உரிமையாளருக்கு தெரிய வந்ததை அடுத்து, அவரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் கார் சாரதியை கைது செய்து மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர்.

நீதிமன்ற விசாரணைகளில் சந்தேகநபர் தன் மீதான குற்றச்சட்டை ஏற்றுக்கொண்டதை அடுத்து, அவரை பிணையில் செல்ல அனுமதித்த மன்று, வாகன பதிவு புத்தகம் உள்ளிட்ட வாகனம் சார்ந்த அனைத்து ஆவணங்களையும் உரிமையாளரான பெண்ணிடம் மீள ஒப்படைக்க உத்தரவிட்டது. (ஐ)

## பரிசளிப்பு நிகழ்வும் கலையரங்கம் திறப்பு விழாவும்!

வடமராட்சி, ஜூன் 24

கரணவாய் தோட்ட அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் புதிதாக அமைக்கப்பட்ட அமரர் சதாசிவம் கலையரங்கு திறப்பு விழாவும் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் ந. நந்தன் தலைமையில் அமரர் சதாசிவம் கலையரங்கில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பழைய மாணவனும் நன்கொடையாளருமான ச. கருணாகரன், சிறப்பு விருந்தினராக வடமராட்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் ப. பரணிதரன், கரவெட்டி ஞானாசாரியர் கல்லூரி அதிபர் கு. லோகேஸ்வரன், ஓய்வு நிலை ஆசிரியருமான திருமதி மனோன்மணி கனகநாயகம் ஆகியோர் பங்கேற்பர்.

புதிய கலையரங்கை நன்கொடையாளியின் தாயார் திறந்து வைப்பார். (இ-02)

## சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவராக மீண்டும் ஹக்கீம்!

காத்தான்குடி, ஜூன் 24

சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவராக மீண்டும் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி ரவூப் ஹக்கீம் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்

சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் 31ஆவது பேராளர் மாநாடு காத்தான்குடி ஹிஸ்புல்லா மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போது, முஸ்லிம் காங்கிரஸின் தலைவராக ரவூப் ஹக்கீம் ஏகமானதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கட்சியின் மாநாட்டில் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி ரவூப் ஹக்கீம் ஏகமனதாக தெரிவு செய்யப்படுகிறார் என்று கட்சியின் தவிசாளர் முழக்கம் மஜீத் அறிவித்தார்.

இதையடுத்து, தக்பீர் முழக்கம், கரகோஷங்களுக்கு மத்தியில் தலைவர் ரவூப் ஹக்கீம் மாநாட்டுக்கு தலைமை வகித்து கட்சியின் 33 பேர் கொண்ட உயர் பீடத்தை அறிவித்தார். (ஐ)

## பேரிடர் திறன்களை மேம்படுத்த கித்துல்கலவில் பயிற்சி நெறி!

கொழும்பு, ஜூன் 24

பேரிடர் திறனை மேம்படுத்தும் நோக்கில் தண்ணீரில் தேடல் மற்றும் மீட்பு பயிற்சியை இலங்கை அனர்த்த முகாமைத்துவத்துக்கான ஆசிய பசுபிக் கூட்டமைப்பு நடத்தவுள்ளது.

கித்துல்கலவில் நாளை செவ்வாய்க்கிழமை முதல் வியாழக்கிழமை வரை மூன்று நாட்கள் ஜப்பானின் 7 சர்வதேச பயிற்சியாளர்களால் இந்தப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இந்தப் பயிற்சி விரைவாக நீரில் வழியை தெரிந்து செல்லுதல், மேம்பட்ட மீட்பு நுட்பங்களில் தேர்ச்சி பெறுதல், நிஜ வாழ்க்கைக் காட்சிகளை உருவகப்படுத்துவதற்கான இரவுநேரப் பயிற்சி ஆகியவற்றைக் கொண்டிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
24.06.2024 திங்கட்கிழமை
குரோதி வருடம், ஆனி 10

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தேர்தல் கால கரிசனைகள்

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கின்றார். அதாவது, "தேர்தல் நெருங்கிவருவதால் 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவரும் தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் நாடகமாடுகின்றனர். இதுவரையில், வடக்கு மக்கள் தொடர்பில் அக்கறைப் படாதவர்கள் இப்போது திடீரென்று கரிசனைப்படுகின்றனர். 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தப் போவதாகவும் கூறுகின்றனர். இவர்கள்தான் கடந்த காலத்தில் அதனை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டபோது அதற்கு ஒத்துழைப்பு வழங்க மறுத்தவர்கள்" - இந்த வகையான அரசியலுக்குள்தான் விஜயதாஸ ராஜபக்ஷவும் அடங்குவார். ஆனால், அவர் கூறுவதில் ஓர் உண்மை உண்டு. அதாவது, தேர்தல் கால கரிசனைகள் பெரும்பாலும் ஒரு வகையான அரசியல் நடிப்பு என்பதில் உண்மை உண்டு.

இன்று 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் பேசி வரும் அனைவருமே கடந்த காலத்தில் அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துவதற்காக குரல் கொடுத்தவர்கள் அல்லர். மாறாக, 13இற்கு எதிராக அடிப்படைவாதிகள் - பௌத்த பிக்குகள் வீதிகளில் இறங்கியபோது அதனை கண்டிக்காதவர்கள். அப்போது நியாயத்தின் பக்கமாக நின்றவர்கள் அல்லர். அனைவருமே அமைதியாக இருந்து எதிர்ப்பை மறைமுகமாக ஆதரித்தவர்கள்தான். ஒன்று எதிர்க்கப்படும்போது அது நியாயமற்றது என்றால் அதற்கு எதிராகக் குரல் கொடுப்பவர்கள்தான் நியாயத்தின் பக்கமாக இருப்பவர்களாவர். அவ்வாறான வரலாற்றை எந்தவொரு தென்னிலங்கை வேட்பாளரும் கொண்டிருக்கவில்லை.

ஆனால், தென்னிலங்கை வேட்பாளர்கள் அனைவருமே, ஒரு விடயத்தில் உறுதியாக இருக்கின்றனர். அதாவது, தேர்தல் கால வாக்குறுதிகளால் தமிழ் மக்களை திருப்திப்படுத்திவிட முடியுமென்று எண்ணுகின்றனர். இதற்கு யார் காரணம்? தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ்த் தேசிய கட்சிகளே இதற்கான காரணமாகும். ஏனெனில், அவர்களும் இவ்வாறான தேர்தல்கால நாடகங்களை நம்புமாறுதான் தமிழ் மக்களை கோருகின்றனர்.

அண்மையில், வடக்குக்கு வந்திருந்த அநுரகுமார திஸநாயக்க தமிழ்த் தேசிய கட்சிகளின் தலைவர்களை வீடு தேடிச் சென்று சந்தித்திருந்தார். ஒரு வேட்பாளர் அரசியல் கட்சிகளை சந்திப்பதில் பிரச்னையில்லை. அது சாதாரணமான ஒன்றுதான் ஆனால், இலங்கை தமிழ் அரசு கட்சியுடனான சந்திப்பின் பின்னர், தமிழ் அரசு கட்சியின் தலைவர்கள் புடைசூழ அநுரகுமார திஸநாயக்க ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றையும் நடத்தியிருந்தார்.

தமிழ் அரசு கட்சியும் இணைந்து பங்குகொள்வது போன்றதொரு தோற்றப்பாடே வெளிப்பட்டது. தேர்தல்கால வாக்குறுதிகளை நம்புங்கள் என்று கூறுவதைப் போன்றுதான் அந்த சந்திப்பு நடைபெற்றிருந்தது. உண்மையில், ஒரு வேட்பாளரின் தேர்தல் விஞ்ஞாபனம்தான் அவரின் அரசியல் நிலைப்பாடு. அது வெளிப்படாத வரையில் அவரை நம்புதல் என்னும் பேச்சுக்கே இடமில்லை. ஆனாலும், தென்னிலங்கை வேட்பாளர்களின் தேர்தல்கால நாடக வசனங்களை தொடர்ந்தும் நம்புங்கள் என்றவாறே தமிழ் அரசு கட்சியின் தலைவர்கள் சிலரின் நடவடிக்கைகள் அமைந்திருக்கின்றன.

இது அடிப்படையிலேயே தவறானது. அண்மையில், இந்திய வெளிவிவகார அமைச்சருடனான சந்திப்பின்போதுகூட, தமிழ் அரசு கட்சியை சேர்ந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினர் தமிழ் பொது வேட்பாளரின் நியாயத்தை சுட்டிக்காட்டியபோது, தமிழ் அரசு கட்சியின் இன்னொரு பாராளுமன்ற உறுப்பினர் அதனை மறுதலித்திருக்கின்றார். இத்தனைக்கும் தமிழ் அரசு கட்சி இன்னும் அதன் உத்தியோகபூர்வ முடிவுகள் எதனையும் எடுத்திருக்கவில்லை. இது தொடர்பில் அறிக்கை வெளியிட்ட கட்சியின் தலைவரும் குறித்த சந்திப்பில் இருந்திருக்கின்றார். தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு கட்சி இவ்வாறு நடந்து கொண்டால் தென்னிலங்கை வேட்பாளர்கள் தமிழ் மக்களை குறைவாக எடை போடுவதில் என்ன தவறு உண்டு?

# யதார்த்தத்துக்கு மாறான கருத்துகளை எதிர்க்கட்சிகள் வெளியிடுகின்றன!

## நிதி இராஜாங்க அமைச்சர் கவலை

கொழும்பு, ஜூன் 24

தேர்தல்கள் நெருங்கி வரும் வேளையில் எதிர்க்கட்சிகளும் அவற்றின் முக்கிய ஆலோசகர்களும் பொருளாதாரத்தை நிர்வகிப்பது தொடர்பில் யதார்த்தத்துக்கு மாறான கருத்துகளை வெளியிடுவது கவலையளிக்கிறது என்று நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் தனது எக்ஸ் தளத்திலேயே இது குறித்துப் பதிவிட்டுள்ளார். அந்தப் பதிவில்,

"கடின உழைப்பால் உருவாக்கப்பட்ட சீர்திருத்தங்களை மாற்றுவது நாட்டிற்கு பேரழிவை ஏற்படுத்தும். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் பெரும் பாதிப்பை சந்தித்திருந்த இலங்கையின் பொருளாதாரத்தை மறுசீரமைப்பதில் சர்வதேச நாணய நிதியம் மற்றும் சர்வதேச பங்குதாரர்கள் முக்கிய பங்கு வகித்துள்ளனர்.

குறுகியகால ஆதாயங்களைக்கூட வழங்காத தவறான வாக்குறுதிகளை வழங்குவதைத் தவிர்க்குமாறு அனைத்து எதிர்க்கட்சிகளையும் அவர்களின் ஆலோசகர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

காலத்தின் தேவை நாட்டின் ஸ்திரத்தன்மையே தவிர அரசியல் விளையாட்டுகள் அல்ல. பொறுப்பான உரையாடலில் ஈடுபடவும்.

நமது பொருளாதார கொள்கைகள் உறுதியான மற்றும் யதார்த்தமான கொள்கைகள். உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறந்த நடைமுறைகளுடன் பொருளாதார நிலப்பரப்பின் வடிவமைப்பை அடிப்படையாகக் கொண்டவை என்பதை உறுதிப்படுத்தவும்" - என்றும் இராஜாங்க அமைச்சர் கூறியுள்ளார். (ஐ)

# தொழிற்சங்கங்களின் பிரச்னைக்கு தீர்வு காண விசேட குழு நியமனம்!

கொழும்பு, ஜூன் 24

தொழிற்சங்கங்களின் சம்பள உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகள் மற்றும் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட குழுவை நியமித்துள்ளார் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

கேகாலை - ருவன்வெல்ல பிரதேசத்தில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

தற்போது நாட்டின் பொருளாதாரம் படிப்படியாக வளர்ந்து வரும் நேரத்தில் அரச ஊழியர்களும் இது தொடர்பில் சிந்திக்க வேண்டும். அத்துடன், அரச ஊழியர்களின் பிரச்னைகளை கலந்துரையாடல்கள் மூலம் தீர்த்துக்கொள்ள முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தேர்தல்களுக்கான வருடம் என்பதால் தொழிற்சங்கங்கள் அரசாங்கத்தின் கவனத்தை தம் மீது திருப்புவதற்கு முயற்சிக்கின்றன. எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் சர்வதேச நாணய நிதியத்தின் விதிமுறைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் - என்றும் இராஜாங்க அமைச்சர் கூறினார். (ஐ)

# தரம் ஒன்றுக்கு மாணவர்களை சேர்ப்பதற்கு புதிய சுற்றறிக்கை!

## இன்று வெளியாகின்றது

கொழும்பு, ஜூன் 24

அரச பாடசாலைகளில் தரம் ஒன்றுக்கு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பான சுற்றறிக்கையின் குறைபாடுகளை நிவர்த்தி செய்து கல்வியில் சம வாய்ப்புகளை உறுதிப்படுத்தும் வகையில் இன்று திங்கட்கிழமை புதிய சுற்றறிக்கை வெளியிடப்படவுள்ளது.


கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த முன்வைத்த இந்த சுற்றறிக்கைக்கு ஜூன் 20ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பிறப்பு சான்றிதழ் இல்லாவிட்டாலும், ஏற்றுக் கொள்ளக்கூடிய வயதை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் இருந்தால் அந்தக் குழந்தை பாடசாலையில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

சுற்றறிக்கையின் பிரிவு 2.1, சில ஏற்றுக்கொள்ளக் கூடிய சான்றுகள் மூலம், பிறப்புச் சான்றிதழ் இல்லாத மற்றும் ஐந்து வயதுக்கு குறைவான மற்றும் வயதுச் சான்றிதழை வழங்கும் குழந்தைகள் நியாயமற்ற அல்லது பாரபட்சமாக நடத்தப்படக் கூடாது என்று கூறுகிறது.

புதிய சுற்றறிக்கையின் படி, விண்ணப்பதாரர்கள் முறைகேடுகள் செய்ய முடியாது. மேலும் பல்வேறு யோசனைகள் மற்றும் ஆலோசனைகளை கருத்தில்கொண்டு முன்னைய சுற்றறிக்கைகளின் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் மேலும் பல திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். புதியவரின் நட்பால் ஆதாயம் அடைவீர்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். உத்தியோகத்தில் இழந்த உரிமையை பெறுவீர்கள்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் திடீரென்று எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். சில நேரங்களில் நன்றி மறந்த சிலரை நினைத்து வருத்தப்படுவீர்கள். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

**மிதுனம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். விலை உயர்ந்த மின்னணு மின்சார பொருட்கள் வாங்குவீர்கள். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**கடகம்**
சமயோசிதமாக சாதுர்யமாக பேசி காரியம் சாதிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். அதிகாரிகள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள்.

**சிம்மம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்தியோகம் குறித்து யோசிப்பீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். கனவு நனவாகும் நாள்.

**கன்னி**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். புது வேலை கிடைக்கும். பழைய கடனைப் பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள். தள்ளிப் போன காரியங்கள் இன்று முடியும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**துலாம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து சில முக்கிய பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். சொத்து வாங்குவது குறித்து யோசிப்பீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**விருட்சிகம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். புது நட்பு மலரும். பழைய சிக்கலில் ஒன்று தீரும். வியாபாரத்தில் சந்தை ரகசியங்களை தெரிந்து கொள்வீர்கள். தடைகள் உடைபடும் நாள்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். உத்தியோகத்தில் இடம், பொருள், ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

**மகரம்**
கணவன் - மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். வெளி உணவுகளை தவிர்ப்பது நல்லது. யாருக்கும் சாட்சி கையெழுத்திட வேண்டாம். எதிலும் கவனம் தேவைப்படும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து சில முக்கிய பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். சொத்து வாங்குவது குறித்து யோசிப்பீர்கள். போட்டிகளை எதிர்கொண்டு வெற்றி காண்பீர்கள்.

**மீனம்**
தவறு செய்பவர்களை தட்டிக்கேட்பீர்கள். உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். பழைய கடன் பிரச்னை கட்டுக்குள் வரும். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

# தமிழக அரசைக் கண்டித்து பா. ஜ. கவினர் போராட்டம்!



சென்னை, ஜூன் 24

கள்ளக்குறிச்சியில் கள்ளச் சாராயம் அருந்தி 50 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழக்க காரணமான தமிழக அரசைக் கண்டித்து பா. ஜ. கவினர் கண்டனப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நாமக்கல்லில் நடந்த போராட்டத்தில் மத்திய இணையமைச்சர் எல். முருகன் தெரிவித்தவை வருமாறு, "கள்ளக்குறிச்சி சம்பவம் மிகப் பெரிய பேரிடர். பொலிஸ் துறைக்குப் பொறுப்பு வகிக்கும் முதல்வர் ஸ்டாலின், இதற்குப் பொறுப்பேற்க வேண்டும். உடனடியாக பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து, ஆறுதல் கூற வேண்டும். துறை அமைச்சர் பதவி விலக வேண்டும்.

அரசின் மெத்தனப் போக்கால்தான் பலர் உயிரிழந்தனர். எனவே, இறந்தவர்களின் குடும்பங்களுக்கு 10 இலட்சம் ரூபாய் இழப்பீடு கொடுப்பது சரியானதுதான்"- என்றார்.

(எ)

# அ.தி.மு.கவினர் 2ஆவது நாளாக அவையில் அமளி, வெளிநடப்பு!



சென்னை, ஜூன் 24

கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய விவகாரம் தொடர்பில் சட்டப் பேரவையில் அ. தி. மு. க. சட்டமன்ற உறுப்பினர்கள் இரண்டாவது நாளாக தொடர்ந்து அமளியில் ஈடுபட்டதோடு மீண்டும் வெளிநடப்பு செய்தனர். இந்த நிலை தொடர்ந்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பேரவைத் தலைவர் அப்பாவு எச்சரிக்கை விடுத்தார்.

கள்ளக்குறிச்சி விவகாரம் தொடர்பாக அவையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் பழனிச்சாமி உள்ளிட்ட அ. தி. மு. க. உறுப்பினர்கள் கூட்டாக கோரிக்கை விடுத்தனர்.

"அவையை ஒத்தி வைக்க வேண்டும் என்றால் விதிகள்படி தீர்மானம் கொண்டு வரவேண்டும். மக்கள் பிரச்னையை மட்டும் அவையில் பேசுங்கள். உங்கள் பிரச்னைக்கு அவையை பயன்படுத்தக் கூடாது" என்று பேரவைத் தலைவர் அப்பாவு அறிவுறுத்தினார். இருப்பினும், தொடர்ந்து கோஷம் எழுப்பிய அ. தி. மு. கவினர் அவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

(எ)

# கள்ளச்சாராய மரணம் 57ஆக அதிகரித்தது

கள்ளக்குறிச்சி, ஜூன் 24

கள்ளக்குறிச்சியில் கள்ளச் சாராயம் அருந்தி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 57 ஆக அதிகரித்தது. இதுவரையில் 11 பேர் சி. பி. சி. ஐ. டி. பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மெத்தனால் கலந்த கள்ளச் சாராயம் அருந்தியதில் உடல் நிலை பாதிக்கப்பட்ட 200 இற்கும் மேற்பட்டவர்கள் கள்ளக்குறிச்சி, சேலம், புதுச்சேரி மற்றும் விழுப்புரம் மாவட்ட அரசு மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர். இதில், இதுவரை 4 பெண்கள் உட்பட 57 பேர் உயிரிழந்தனர். (எ)

# கள்ளச்சாராயம் விற்ற 808 பேர் அதிரடி கைது

சென்னை, ஜூன் 24

கள்ளச்சாராய விற்பனை தொடர்பாக தமிழகம் முழுவதும் 84 இடங்களில் சோதனை செய்து 808 பேரை பொலிஸார் அதிரடியாக கைது செய்துள்ளனர்.

கள்ளக்குறிச்சி சம்பவத்தை தொடர்ந்து, மாநிலம் முழுவதும் கள்ளச் சாராயம் விற்பனை செய்பவர்களை கண்காணித்து நடவடிக்கை எடுக்க அரசு உத்தரவிட்டது. இதன்படி, புதுக்கோட்டை, திருச்சி, கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம்,கடலூர், செங்கல்பட்டு, திருவள்ளூர் உள்ளிட்ட மாவட்டங்களில் 84 இடங்களில் பொலிஸார் சோதனை நடத்தினர்.

இதில், 876 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 808 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும், 3,000 லீற்றர் கள்ளச்சாராயம் அழிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

# மக்கள் விரோத செயலில் அரசு

## திருமா சாடல்

சென்னை, ஜூன் 24

மதுக்கடை வருமானத்தை அதிகரிக்க அரச அதிகாரியைப் பணியாற்ற வைப்பது மக்கள் விரோதச் செயல் என்று விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் தெரிவித்தார்.

கள்ளக்குறிச்சியில் 2 நாட்கள் மக்களைச் சந்தித்ததில், அரசு மதுபான கடைகளை மூட வேண்டும் என்பதையே ஒரு மித்த குரலில் கூறினர். ஆட்சிகள் மாறினாலும் கள்ளச்சாராய தொழில் தொடர்கிறது என்பதே மக்கள் கருத்தாக இருக்கிறது. உழைக்கும் மக்களை குறிவைத்து இந்த வணிகம் நடக்கிறது. நாம் தொடர்ந்து தேசிய அளவில் மதுவிலக்கை வலியுறுத்தி வருகிறோம்.

முழு மதுவிலக்கை நடைமுறைப்படுத்துவோம் என்ற உறுதியான முடிவுக்கு அரசு வந்தால் தான் கள்ளச்சாராயத்தை ஒழிக்க முடியும். சாராயக் கடைகள் எங்குமே இல்லையென்றால் கள்ளச்சாராயத்தை கட்டுப்படுத்தும் ஒரே வேலைதான் இருக்கும். நல்ல சாராயத்தை எப்படி விற்பனை செய்வது என்று மாதந்தோறும் ஆய்வுக் கூட்டம் நடத்துவதும், ஆட்சியர் தலைமையில் கலந்தாய்வு கூட்டம் நடத்துவதெல்லாம் தேவையில்லை. ஆண்டுக்கு ஆண்டு அரசுக்கு வருமானம் பெருக்க வேண்டும் என்பதற்காக ஐ. ஏ. எஸ். அதிகாரியை செயல்பட வைப்பது மக்கள் விரோதமான செயலாகத்தான் இருக்கிறது- என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கொக்குவில் - கற்புலத்து (நந்தாவில்) அம்பாள் ஆலயத்தின் தீர்த்தத் திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றபோது...!

# நெடுந்தீவு இளைஞர் கொலை; தேடப்பட்டு வந்தவர்கள் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 24

**நெடுந்தீவில் இளைஞர் ஒருவர் அடித்துப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புபட்ட மூன்று சந்தேக நபர்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

நெடுந்தீவில் கடந்த வியாழக்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் இளைஞர் ஒருவர் அடித்துக் கொல்லப்பட்டார்.

இவருடன், கொலை தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்ட நிலையில் ஏனைய மூவர் தலைமறைவாகினர். இவர்களை, பொலிஸாரும் இளைஞரின் உறவினர்களும் தேடி வந்தனர்.

தலைமறைவான மூவரும் நெடுந்தீவில் பற்றைக்குள் மறைந்திருந்த நிலையில் நேற்று முன்தினம் கண்டுபிடிக்கப்பட்டு கைது செய்யப்பட்டனர்.

கைதான மூவரும் நேற்று முன்தினம் இரவே யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு விசாரணைக்காக கொண்டு வரப்பட்டனர். (ஐ)

# கைபேசியை திருடிய குற்றம் பெண்ணும் இளைஞரும் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 24

பெறுமதியான கைபேசியை திருடிய குற்றச்சாட்டில் பெண் ஒருவரும் அதனை வாங்கிய குற்றத்தில் இளைஞர் ஒருவரும் யாழ்ப்பாணம் பொலிஸாரால் குது செய்யப்பட்டுள்ளனர்.

திருட்டுப்போன தனது விலையுயர்ந்த கைபேசி தொடர்பாக உரிமையாளர் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

விசாரணை நடத்திய பொலிஸார் அந்த கைபேசியை வைத்திருந்த இளைஞரை கைது செய்தனர். அத்துடன், கைபேசியையும் மீட்டனர்.

அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில், அந்த கைபேசியை பெண்ணொருவரே தனக்கு விற்பனை செய்தார் என்று கூறினார். இதைத் தொடர்ந்து அவரும் கைதுசெய்யப்பட்டார்.

கைதான இருவரும் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# குடல் அலர்ஜியால் சிறுவன் மரணம்!

யாழ்ப்பபாணம், ஜூன் 24

அச்சுவேலியில் குடல் அலர்ஜியால் நேற்றையதினம் சிறுவன் ஒருவர் உயிரிழந்தார்.

அச்சுவேலி மேற்கை சேர்ந்த கபிலன் கபிசன் (வயது-15) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்தார்.

சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

குறித்த சிறுவனுக்கு கடந்த வியாழக்கிழமை முதல் வாந்தி ஏற்பட்டுள்ளது. இதையடுத்து சிறுவன் அச்சுவேலி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

பின்னர் நேற்றுமுன்தினம் அதிகாலை நான்கு மணியளவில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். ஆனால், அவர் கொண்டு செல்லப்படும்போது வழியிலேயே உயிரிழந்தார்.

பிரேத பரிசோதனையில் குடல் அலர்ஜி நோயால் மரணம் சம்பவித்ததாகத் தெரிய வந்தது.

சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஐ)




# உலக இளைஞர் பௌத்த சங்கத்தின் 20ஆவது மாநாடு யாழில் நடைபெற்றது

யாழ்ப்பாணம், ஜூன் 24


உலக இளைஞர் பௌத்த சங்க சபையின் 20ஆவது வருடாந்த மாநாடு மற்றும் உலக பௌத்த முன்னணியின் 5ஆவது வருடாந்த மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

நயினாதீவு ரஜமகா விகாரையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஆரம்பித்த இந்த மாநாட்டில் 27 நாடுகளில் இருந்து சுமார் 350 பௌத்த மத பிரதிநிதிகளின் வருகை தந்தனர்.

உலக இளைஞர் பௌத்த சங்க சபையின் தலைவர், உலக பௌத்த முன்னணியின் தலைவர், உலக இளைஞர் பௌத்த சங்க சபையின் பிரதிநிதிகள், உலக பௌத்த முன்னணியின் பிரதிநிதிகள், விகாராதிபதிகள், பௌத்த பிக்குகள், யாழ்ப்பாணபதில் மாவட்ட செயலாளர், யாழ்ப்பாண மாவட்ட இராணுவ கட்டளை தளபதி, வடக்கு மாகாண கடற்படை தளபதி உள்ளிட்ட அரச உயரதிகாரிகள் பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் பல்வேறுபட்ட கலைநிகழ்ச்சிகள் நடந்ததுடன் ஞாபகார்த்த நினைவு முத்திரையும் வெளியிட்டு வைக்கப்பட்டது. (ஐ)

# எரியுண்ட நிலையில் மோ. சைக்கிள் மீட்பு



யாழ்ப்பாணம், ஜூன் 24

கோப்பாய் இராச பாதையில் மோட்டார் சைக்கிள் ஒன்று எரியுண்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது.

மோட்டார் சைக்கிள் எரியுண்டு கிடந்த இடத்திலிருந்து சுமார் 20 மீற்றர் தொலைவில் BIY 6114 என்ற இலக்கம் கொண்ட இலக்கத் தகடு மற்றும் கோடரி ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டன.

மோட்டார் சைக்கிள் வன்முறைக்குழுவுடையதா அல்லது வேறு நபர்களின் மோட்டார் சைக்கிளை பறித்து வந்து தீ மூட்டப்பட்டதா என்பது தெரியவில்லை. கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 18 இந்திய மீனவர்கள் நெடுந்தீவில் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 24

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் 18 இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டனர்.

நெடுந்தீவு கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மூன்று படகுகளையும் அதிலிருந்த 18 இந்திய மீனவர்களையும் கடற்படையினர் கைது செய்தனர்.

கைதானவர்கள் மயிலிட்டி மீன்பிடி துறைமுகத்துக்கு அழைத்துச் செல்லப்படுவதுடன், கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தினரிடம் ஒப்படைத்து ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (ஐ)

# நாணயத்தாளை அவமதித்த தியாகேந்திரனிடம் வாக்குமூலம்!

யாழ்ப்பாணம், ஜூன் 24

நாட்டில் பயன்பாட்டிலுள்ள 5 ஆயிரம் ரூபாயை காலில் போட்டு மிதித்து அவமதித்த தியாகி அறக்கொடை நிறுவனத்தின் தலைவர் வாமதேவா தியாகேந்திரனிடம் யாழ்ப்பாண பொலிஸார் வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்.

குறித்த நபர் தனது மகளின் பிறந்த தினத்தை முன்னிட்டு, கடந்த 7ஆம் திகதி தனது பணிமனையில் உதவி தேவைப்படும் மக்களுக்கு உதவிகளை வழங்கியிருந்தார்.

அந்த சமயத்தில், அவர் 5 ஆயிரம் ரூபாய் தாள்களை எடுத்து நிலத்தில் போட்டதுடன், அதனை சப்பாத்து காலால் மிதித்தார். இது தொடர்பான காணொலி சமூக வலைத்தளங்களில் பரவின. அவரின், இந்த செயலுக்கு பலரும் எதிர்ப்பு தெரிவித்திருந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர். நேற்று முன்தினம் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்துக்கு அவரை அழைத்த பொலிஸார் அவரின் வாக்குமூலத்தை பெற்றனர்.

அவரிடம், பெறப்பட்ட வாக்கு மூலத்தின் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜயதாஸவின் உறுப்புரிமையை நீக்குவதற்கு பெரமுன தீர்மானம்?

## இன்று முடிவு எடுக்கப்படும்

கொழும்பு, ஜூன் 24

**நீதியமைச்சராக உள்ள விஜயதாஸ ராஜபக்ஷவின் கட்சி உறுப்புரிமையை நீக்குவது தொடர்பாக இன்று திங்கட்கிழமை சிறீ லங்கா பொதுஜன பெரமுன தீர்மானிக்கவுள்ளது.**

பெரமுன கட்சியின் அகில இலங்கை செயல்குழுக் கூட்டம் இன்று கொழும்பில் நடைபெறவுள்ளது.

இதன்போது, அமைச்சர் விஜயதாஸவுக்கு எதிரான பிரேரணை முன்வைக்கப்பட்டு நிறைவேற்றப்படும் என அந்தக் கட்சியின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினராக இருந்து கொண்டே சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியை ஏற்றுக்கொண்டதன் ஊடாக, விஜயதாஸ ராஜபக்ஷ, சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் கட்சி யாப்பை மீறினார் என்று கூறப்படுகின்றது.

அதன் அடிப்படையில் அவரது கட்சி உறுப்புரிமை பறிக்கப்பட்டால், அவர் தமது பாராளுமன்ற உறுப்புரிமையையும் இழக்க நேரும் - என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# காலநிலை மாற்றங்களால் குழந்தைகளுக்கு நோய் பரவல்!

## மருத்துவ நிபுணர் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 24

நிலவும் காலநிலையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மற்றும் பல்வேறு காரணங்களால் சிறு பிள்ளைகளுக்கு பல்வேறு நோய்கள் பரவுவது அதிகரித்துள்ளதாக சிறுவர்களுக்கான மருத்துவ கல்வியின் செயலாளர் மருத்துவர சன்ன டி சில்வா தெரிவித்துள்ளார்.

பல்வேறு வைரஸ் தொற்றுகளால் சுவாச அமைப்பு தொடர்பான நோய்கள் அதிகம் காணப்படுகிறது. இதனால் காய்ச்சல், சளி போன்ற நோய்கள் சிறுவர்களிடையே அதிகமாக பரவுகின்றன.

இந்த நோய்கள் மிக இலகுவாகப் பரவும் என்பதால், சிறு குழந்தைகளை முடிந்தவரை பாதுகாப்பது மிகவும் அவசியமானது - என்றும் மருத்துவர் அறிவுறுத்தினார். (ஐ)


# டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 24

நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வருவதாக சுகாதார அமைச்சு எச்சரித்துள்ளது.

இதன்படி, நடப்பாண்டில் இதுவரையான காலப்பகுதிக்குள் 27 ஆயிரத்து 197 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதே வேளை, 9 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளன.

அதிகளவான டெங்கு நோயாளர்கள் மேல் மாகாணத்திலிருந்து பதிவாகுவதாகச் சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.



நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக டெங்கு நோய் பரவக்கூடிய அபாயம் காணப்படுவதால் பொதுமக்கள் அனைவரும் தங்களது சுற்றுச்சூழலைச் சுத்தமாக வைத்திருக்குமாறு சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. (எ)

# பறவைக் காய்ச்சலால் இதுவரை இலங்கைக்கு பாதிப்பு இல்லை!

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 24

உலகின் சில நாடுகளில் பரவி வரும் பறவைக் காய்ச்சல் நோய் தொடர்பில் இலங்கைக்கு இதுவரை எந்த ஆபத்தும் ஏற்படவில்லை என சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டில் பறவைக் காய்ச்சல் தொடர்பான அபாயகரமான சூழல் இல்லையென்றாலும் அது குறித்து அவதானமாக செயல்படுவதாகவும் அவர் கூறினார்.

"இலங்கை மக்களுக்கு இந்த வகையான நோய் ஆபத்து இல்லை என்பதை நாம் சொல்ல வேண்டும். உலக சுகாதார நிறுவனம் எங்களுக்கு எந்த சிறப்பு எச்சரிக்கையும் வழங்கவில்லை. பறவைக் காய்ச்சல் நிலைமை உலகின் பல்வேறு நாடுகளில் இதற்கு முன்பு பதிவாகிய போதும் அது தீவிரமாக பரவவில்லை. எனவே, இந்த விடயம் தொடர்பில் தேவையற்ற அச்சம் கொள்ள வேண்டாம்" என்றார். (ஐ)

# திருமணத்துக்கு புறம்பான உறவு; சகோதரியின் கணவர் கொலை!

கொழும்பு, ஜூன் 24

தனது சகோதரியின் கணவர் வேறொரு பெண்ணுடன் தொடர்பில் இருந்ததால் அவரை கத்தியால் குத்திக் கொன்றுவிட்டு தப்பிச் சென்றவரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

அம்பாந்தோட்டை - கட்டுவானை - அமுதமன பிரதேசத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில், 41 வயது நபரே கொலையானார். இறந்தவரின் மனைவியே அவரை கொன்றார் என்று விசாரணைகளில் தெரிய வந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொலை சந்தேகநபர் விமானப் படையில் பணியாற்றியவர் என்றும் தப்பி ஓடிய அவரை பொலிஸார் தேடி வருகின்றனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# இரத்தினக்கல் அகழ்ந்த 6 சந்தேகநபர்கள் கைது!

நுவரெலியா, ஜூன் 24

அனுமதியின்றி இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபட்ட ஆறு சந்தேக நபர்கள் மஸ்கெலியா பொலிஸ் விசேட அதிரடிப் படை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பொகவந்தலாவையில் அனுமதியின்றி இரத்தினக்கல் அகழ்வதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்கள் 30-45 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். கைதானோரிடம் இருந்து இரத்தினக்கல் அகழ்வுக்கு பயன்படுத்தப்படும் கருவிகள் கைப்பற்றப்பட்டன.

சந்தேகநபர்கள் நீதிமன்றில் இன்று முற்படுத்தப்படவுள்ளனர். (ஐ)

# தெங்கு மூலமான வருமானம் உயர்வு



கொழும்பு, ஜூன் 24

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தில் தெங்கு உற்பத்தி சார்ந்த பொருட்களின் ஏற்றுமதி வருமானம் 20 வீதம் அதிகரித்துள்ளதாக தென்னை அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதற்கமைய 33 கோடி டொலர் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 10 ஆயிரத்து 54 கோடி ரூபாய் வருமானம் கிடைத்துள்ளதாக தென்னை அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் ரொஷான் பெரேரா தெரிவித்தார். (ஐ)

# போரா சமூகத்தின் மாநாடு கராச்சிக்கு மாற்றப்பட்டது

## இலங்கைக்கு பெரும் நட்டம்

கொழும்பு, ஜூன் 24

தாவூதி போரா சமூகத்தின் ஆன்மீக மாநாடான 'ஆஷாரா முபாரகா' இலங்கையிலிருந்து பாகிஸ்தானின் கராச்சிக்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், மாநாட்டில் கலந்து கொள்வதற்கு கொழும்பு வரவிருந்த பலர் தமது பயணத்தை இரத்து செய்துள்ளனர் என்றும் தெரிய வருகின்றது.

எவ்வாறாயினும், இலங்கையில் உள்ள போரா சமூகத்தினர் நேரலை மூலம் நிகழ்வை இணைந்து நடத்த தயாராகி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிகழ்ச்சி மாற்றம் குறித்த செய்திகள் வந்தவுடன், சில முன்பதிவுகள் ரத்து செய்யப்பட்டன என்று ஹோட்டல் உரிமையாளர்கள் சங்கத்தின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

போரா சமூகத்தின் ஆன்மீகத் தலைவர் கலாநிதி சையத்னா முஃபத்தால் சைஃபுதீனை அழைப்பதில் பல நாடுகள் ஆர்வம் காட்டின என்றும், இதன்படி கராச்சி தெரிவுசெய்யப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் ஜூலை 6ஆம் திகதி முதல் 10 நாட்கள் இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

# வற் வரி வருமானம் 50 வீதத்தால் உயர்வு

கொழும்பு, ஜூன் 24

பெறுமதி சேர் வரி (வற்) வருமானம் 50 வீதத்தால் அதிகரித்துள்ளதாக நிதி அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.

கடந்த 2022ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 2023ஆம் ஆண்டில் வரி வருமானம் 50 வீதத்தால் உயர்வடைந்துள்ளது.

2023ஆம் ஆண்டில் பெறுமதி சேர் வரி மூலம் 69 ஆயிரத்து 450 கோடி ரூபாய் வருமானம் ஈட்டப்பட்டிருந்தது. 2022ஆம் ஆண்டில் பெறுமதி சேர் வரி 46 ஆயிரத்து 310 கோடி ரூபாய் வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்போதைய அரசாங்கம் பெறுமதி சேர் வரியை அதிகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பாதாள உலகக் குழுவை சேர்ந்த நபர் ஒருவர் கைது

கொழும்பு, ஜூன் 24

தென்னிலங்கை பாதாள உலகக் கும்பலை சேர்ந்த - பொலிஸாரால் பல நாட்களாக தேடப்பட்டு வந்த நபரை கைது செய்துள்ளதாக கொழும்பு - கல்கிசை பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் இவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் மீது நீதிமன்ற பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. சந்தேகநபர் கைது செய்யப்பட்டபோது, அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட கைத்துப்பாக்கி, 10 தோட்டாக்கள், 22 கிராம் ஹெரோயின் கைபேசி என்பன கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டீல் அரசியலுக்காக பணம் ஒதுக்கும் ஆட்சியாளர்கள்!

## சஜித் பிரேமதாஸ சாடல்



கொழும்பு, ஜூன் 24

**ஆட்சியாளர்களிடம் தமது தனிப்பட்ட தேவைகளுக்கேற்ப திட்டங்களை செயல்படுத்த பணம் இருந்தாலும் பாடசாலைகளில் உள்ள குறைபாடுகளை களைவதற்கு அவர்களிடம் பணம் இல்லை. போலி வேலைகளுக்கு முடிவில்லாது பணம் ஒதுக்கீடு செய்கின்றனர். இந்தப் பணத்தில் டீல் அரசியலும்கூட முன்னெடுக்கப்பட்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

குருநாகல், மாவத்தகம, பரகஹதெனிய தேசிய பாடசாலைக்கு ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்களை கையளித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "பிரபஞ்சம் மற்றும் மூச்சுத் திட்டங்களை முன்னெடுத்துவரும்போது பாராளுமன்றத்திலும் வெளியிலும் என்மீது கோபத்தை வெளிப்படுத்தி குரோதம் காட்டுகின்றனர். நான் பிள்ளைகளுக்கு மது, போதைப்பொருள், சிகரெட்டைப் பகிர்ந்தளிக்கவில்லை. கணினிகள், அகராதிகளையே பகிர்ந்தளிக்கிறேன். இவை தவறான விடயங்கள் அல்ல எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஆட்சியாளர்கள், தலைநகரின் ஆடம்பர குளிரூட்டி அறைகளில் இருந்துகொண்டு ஒரு குறிப்பிட்ட கும்பலுடன் டீலில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நாட்டிலுள்ள சாதாரண குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள் உயர் மட்டத்தை அடைவதை அவர்கள் விரும்பவில்லை. காலத்துக்கேற்ற நவீன கல்வியை வழங்காது, பழமைவாத கல்வியை வழங்குவதன் மூலம் இந்த பிள்ளைகளை அடிமைகளாக வைத்திருப்பதே அவர்களின் நோக்கம்.

புரட்சிகர கோஷங்களை எழுப்பும் கட்சிகள் அனைத்தும் தற்போது அரசாங்கத்துடன் டீலில் ஈடுபட்டுள்ளன. மக்களின் வாக்குகளால் ஆட்சிக்கு வந்து மக்களையே காட்டிக் கொடுக்கும் அரசியல் கலாசாரம் இந்நாட்டில் காலாகாலமாக இருந்து வருகிறது. இந்நிலையை மாற்றியமைப்போம். பணத்துக்காக பிள்ளைகளையும் மக்களையும் ஏமாற்றி அவர்களின் கொள்கைகளை காட்டிக் கொடுக்கும் அரசியலும், டீல் அரசியலும் நாட்டில் காணப்படுவதாக எதிர்க் கட்சித் தலைவர் தெரிவித்தார். (ஐ)

# ஐக்கிய மக்கள் சக்தியினருக்கு ரூ. 120 கோடி ஒதுக்கியது அரசு!

கொழும்பு, ஜூன் 24

2024ஆம் ஆண்டுக்கான பரவலாக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகையில் 120. 6 கோடி ரூபாய் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதில், பைசல் காசிம் இஷாக் ரஹ்மான், சைட் அலி சஹிர் மௌலானா ஆகியோருக்கு அதிகளவான தொகையாக தலா 10 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளன.

ரிஷாத் பதியுதீன் எம். பிக்கு 8.5 கோடி ரூபாய், காவிந்த ஜெயவர்த்தனவுக்கு 6.9 கோடி ரூபாய், ரோகிணி கவிரத்னவுக்கு 6. 2 கோடி ரூபாய், ஜே. சி. அலவத்துவலவுக்கு 6. 1 கோடி ரூபாய், வேலு குமாருக்கு 6 கோடி ரூபாய், ராஜித சேனாரத்ன, கயந்த கருணாதில ஆகியோருக்கு தலா 5. 1 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளன.

மேலும், ஹர்ஷ டி சில்வா, சுஜித் சஞ்சய் பெரேரா, கிங்ஸ் நெல்சன் மற்றும் டபிள்யூ. எச். எம். தர்மசேன ஆகியோருக்கு தலா 5 கோடி ரூபாயும் அஜித் மன்னப்பெரும, பாட்டலி சம்பிக்க ரணவக்க ஆகியோருக்கு தலா 4. 9 கோடி ரூபாய் , திலீப் வெதஆராய்ச்சிக்கு 4. 8 கோடி ரூபாய் ஹெக்டர் அப்புஹாமிக்கு 1. 8 கோடி ரூபாயும் விடுவிக்கப்பட்டுள்ளன. (ஐ)

# தாயாரை கல்லால் தாக்கி கொன்ற தனயன் கைது!

கொழும்பு, ஜூன் 24

காணி தகராறில் தனது தாயாரை கல்லால் தாக்கிக் கொன்ற மகனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பதுளை - சரணியா தோட்டம் தங்கமலை பிரிவு கந்தே கெதரவைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தாயே (62 வயது) கொலை செய்யப்பட்டார்.

பொசன் பௌர்ணமி தினமான 21ஆம் திகதி இரவு மகனுக்கும் தாய்க்கும் இடையே காணி தகராறு ஏற்பட்டுள்ளது. இதில், தனது தாயரை மகன் கல்லால் தாக்கியுள்ளார். இதில் தாயார் தலையில் பலத்த காயமடைந்தார். மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்த சம்பவத்தில் அவரின் மகனான 44 வயது நபரே கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ஐ)

# இரு நாளில் நடந்த விபத்துகளில் 7 பேர் உயிரிழப்பு; 15 பேர் காயம்!

கொழும்பு, ஜூன் 24

பொசன் போயா தினமான வெள்ளிக்கிழமையும் மறுநாள் சனிக்கிழமையும் நாட்டில் நடந்த விபத்துகளில் 7 பேர் உயிரிழந்தனர். 15 பேர் காயமடைந்தனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

கண்டி - யாழ்ப்பாணம் வீதியில் மாத்தளையில் பேருந்தும் முச்சக்கரவண்டியும் நேருக்கு நேர் மோதிய விபத்தில் தாயும் மகளும் உயிரிழந்தனர். இதில், தந்தையும் மகனும் படுகாயமடைந்தனர்.

பதுளையில் இடம்பெற்ற விபத்தில் 73 வயது நபர் உயிரிழந்தார்.

கொழும்பு புத்தளம் வீதியின் ஜயபிம பகுதியில் பேருந்தும் உழவு இயந்திரமும் மோதியதில் உழவு இயந்திரத்தின் சாரதி உட்பட 10 பேர் காயமடைந்தனர். ஒருவர் உயிரிழந்தார்.

அநுராதபுரம் - பாதெனிய ஏ28 பிரதான வீதியில் தலாவ விவசாய சேவை நிலையத்துக்கு முன்பாக பேருந்தும் முச்சக்கர வண்டியும் மோதிய விபத்தில் இரு இளைஞர்கள் உயிரிழந்தனர். மேலும் இருவர் படுகாயமடைந்தனர்.

அனுராதபுரம் ரம்பேவ வீதியில் பரசங்கஸ்வெவ பகுதியில் மோட்டார் சைக்கிளை லொறி மோதியதில் ஒருவர் காயமடைந்தார். (ஐ)

# ஜனாதிபதி, நீதியமைச்சரால் நீதித்துறைக்கு அச்சுறுத்தல்

## சட்டத்தரணிகள் ஒன்றிணைவு அமைப்பு

கொழும்பு, ஜூன் 24

ஜனாதிபதியும் நீதியமைச்சரும் சமீபத்தில் உயர்நீதிமன்றத்துக்கு எதிராக வெளியிட்ட கருத்துகள் நீதித்துறையை அச்சுறுத்தும் தன்மை கொண்டவை என்று இலங்கை சட்டத்தரணிகள் ஒன்றிணைவு என்ற சட்டத் தரணிகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

பால்நிலை சமத்துவ சட்டங்கள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு எதிராக தெரிவித்த கருத்துகளும் நீதியமைச்சர் தெரிவித்த கருத்துகளும் நீதித்துறையை அச்சுறுத்தும் தன்மை கொண்டவை என சட்டத்தரணிகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி நீதியமைச்சர் கல்வியமைச்சர் ஆகியோர் நிறைவேற்று அதிகாரத்தின் முழுமையான பிரதிநிதிகள். உயர்நீதிமன்றத்துக்கு நீதிபதிகளை நியமிக்கும் முக்கிய அரசமைப்பு அதிகாரம் மற்றும் பொறுப்பை ஜனாதிபதி செயற்படுத்துகின்றார் என சட்டத்தரணிகள் அமைப்பு தெரிவித்துள்ளது. நீதியமைச்சர் நீதித்துறையின் வளங்களை கட்டுப்படுத்துகின்றார் எனவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

பாராளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்தி உயர் நிறைவேற்று அலுவலகம் நீதித்துறை குறித்து நயவஞ்சகமான கடுமையான கருத்துக்களை வெளியிடுவது தெளிவான அதிகார துஸ்பிரயோகமாகும் எனவும் இலங்கை சட்டத்தரணிகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

# துறைமுக அதிகார சபையின் மேன்முறையீடு தள்ளுபடி

கொழும்பு, ஜூன் 24

தகவல் வழங்கலின் போது அமெரிக்க டொலரில் இலங்கைத் துறைமுக அதிகார சபையால் கட்டணம் அறவிட முடியாது என தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு வழங்கிய தீர்ப்பை மேன்முறையீட்டு நீதிமன்றம் உறுதிப்படுத்தியதுடன் குறித்த தீர்ப்புக்கு எதிராக துறைமுக அதிகார சபையால் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீடும் தள்ளுபடி செய்யப்பட்டது.

தகவலறியும் உரிமைச் சட்டத்தின் பிரகாரம் பொது அதிகார சபையால் வழங்கப்படுகின்ற தகவலுக்கு ஒரு கட்டண எல்லை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மாறாக, வேறு எந்தக் கட்டணத்தையும் அதிகார சபையொன்றால் தனிநபரிடமிருந்தோ அல்லது நிறுவனத்திடமிருந்தோ அறவிட முடியாது என மேன்முறையீட்டு நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இலங்கை துறைமுக அதிகார சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான கட்டண அட்டவணையின் பிரகாரம் தகவல் கோரிக்கைக்கு அமெரிக்க டொலரில் குறித்த அதிகார சபையினால் கட்டணம் அறவிடப்படுகின்றமை 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலறியும் உரிமைச் சட்டத்தின் 32 ஆவது பிரிவின் 4 ஆவது உப பிரிவுக்கு இணங்கிச் செல்லவில்லை எனத் தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு முன்னர் தீர்ப்பளித்திருந்தது.

அத்துடன் தகவல் கோரிக்கைக்குத் துறைமுக அதிகார சபையின் சொந்தக் கட்டண அட்டவணையை பயன்படுத்துவது தகவலறியும் சட்டத்துக்கு எதிரானது எனவும் ஆணைக்குழு அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நிதி, மதுபான உரிமம் பெற்ற எம். பிக்கள்மீது ஒழுக்காற்று

## மு. கா., ஐ. ம. ச. அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 24

கட்சியின் தீர்மானத்துக்கு புறம்பாக பரவலாக்கப்பட்ட நிதி மற்றும் மதுபான உரிமங்களைப் பெற்ற எதிர்க்கட்சி எம். பிக்கள்மீது கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க எதிர்க்கட்சி தலைவர்கள் தீர்மானித்துள்ளனர்.

அநேகமான எம். பிக்கள் தங்கள் கட்சித் தலைவருக்குத் தெரியாமல் பரவலாக்கப்பட்ட நிதி மற்றும் மதுபான உரிமங்களைப் பெற்றுள்ளனர் என்று கூறப்படுகிறது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம்,

"பரவலாக்கப்பட்ட நிதியைப் பெற்ற தமது கட்சியைச் சேர்ந்த பலரின் பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. கட்சித் தலைமைக்கு தெரியாமல் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாகவும், அந்த எம். பிக்கள் எதிர்காலத்தில் ஒழுக்காற்று விசாரணைகளை எதிர்கொள்ள நேரிடலாம்", எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த எதிர்கட்சியின் பிரதமகொறடா லக்ஷ்மன் கிரியெல்ல,

ஐக்கிய மக்கள் சக்தி என்ற ரீதியில் பரவலாக்கப்பட்ட நிதியோ, மதுபான அனுமதிப்பத்திரமோ, வரியில்லா வாகன அனுமதிப்பத்திரமோ பெறுவதற்கு எந்தவொரு தீர்மானமும் இன்னும் எடுக்கவில்லை எனத் தெரிவித்தார்.

கட்சியின் தீர்மானத்துக்கு புறம்பாக அரசாங்கத்திடமிருந்து இவ்வாறான சலுகைகளை பெற்ற பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருமலை மருத்துவமனையில் எரிக்கப்படும்

# மருத்துவக் கழிவுகளால் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு

திருகோணமலை, ஜூன் 24

**திருகோணமலை மருத்துவமனையில் எரிக்கப்படும் மருத்துவக் கழிவுகளால் சுற்றுச்சூழல் மாசடைவதோடு மக்களும் பாதிக்கப்படுவதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.**



திருகோணமலை மருத்துவமனையின் கழிவுகளை எரிக்கும் இயந்திரப் பகுதியின் புகை போக்கியானது ஒரு வருடத்துக்கு மேலாக உடைந்துள்ள நிலையில் அது திருத்தப்படாமல் அந்தப் பகுதியில் மருத்துவமனைக் கழிவுகள் எரிக்கப்பட்டு வருகின்றன.

இந்த இயந்திரத்தினூடாக வெளியேறுகின்ற புகையால் மருத்துவமனை உட்பட அதனை அண்டிய பகுதிகளிலும் வளி மாசடைவதோடு, மருத்துவமனையில் உள்ள நோயாளிகள், திருகோணமலை கடற்கரையை நோக்கி வருகின்ற சுற்றுலாப் பயணிகள் உட்பட அயலில் உள்ள மக்களும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இப்பகுதியில் மருத்துவமனையில் இருந்து வெளியேற்றப்படுகின்ற ஆபத்து மிகுந்த மருந்துக்கழிவுகள், சத்திர சிகிச்சையின் மூலம் அகற்றப்படுகின்ற உடற்பாகங்கள், பிளாஸ்ரிக் பொருட்கள் போன்றவை நேர அட்டவணையின்றி எரிக்கப்படுவதாக தெரியவருகின்றது.

ஆரம்பத்தில் இந்தப் புகையானது கிட்டத்தட்ட 60 அடி உயரமான புகைபோக்கியின் மூலம் மேல் வளிமண்டலம் நோக்கி விடுவிக்கப்பட்டிருந்த போதும் தற்போது 40 அடி உயரமான புகைபோக்கி உடைந்துள்ள நிலையில் அதனை சீர் செய்யாமல் கழிவுப் பொருட்கள் எரிக்கப்பட்டு வருவதனால் புகையானது சூழலில் பரவி வருகிறது.

இதனால் சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டுள்ளதோடு, அந்தப் புகை மக்களுடைய சுவாசத்திலும் கலக்கிறது. இது தொடர்பாக பலரால் முறைப்பாடுகள் செய்யப்பட்டும் இதுவரை இந்த இயந்திரம் திருத்தம் செய்யப்படவில்லை எனவும் பொதுமக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (எ)



# "13ஐ ஏற்கும் மனநிலைக்கு அனைவரும் வந்துள்ளனர்"

நிந்தவூர், ஜூன் 24

இலங்கை - இந்தியா ஒப்பந்தத்தின்படியான 13 ஆவது அரசமைப்புத்திருத்தம் மூலம் கிடைத்த இணைந்த மாகாண சபையை பத்மநாபா தீர்க்க தரிசனமாக ஏற்றுக்கொண்டதுடன் 13 ஆவது திருத்தத்தை நிதர்சனமாக நடைமுறைப்படுத்தவும் முனைப்புடன் செயல்பட்டார். ஆனால், அன்று அதனை தட்டிக்கழித்து உதாசீனம் செய்தவர்கள் இன்று 13 ஆவது திருத்தச் சட்டம் ஏற்புடையது என்ற நிலைப்பாட்டில், அதற்காக பிச்சை வேண்டாம் நாயைப்பிடி என்ற நிலைப்பாட்டுக்கும் வந்துள்ளனர்.

- இவ்வாறு தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் உதவிப் பொதுச் செயலாளர் சலீம் (பிர்தௌஸ்) தெரிவித்தார்.

தமிழர் சமூக ஜனநாயக் கட்சியின் (பத்மநாபா - ஈ. பி. ஆர். எல். எவ்) அனுசரணையுடன், பாண்டிருப்பு 2 ஏ அன்பு வழிபுரத்திலுள்ள கட்சியின் மாவட்ட தலைமை அலுவலக மண்டபத்தில் நடைபெற்ற 34 ஆவது தியாகிகள் தின நிகழ்வில் அவர் மேற்கண்டவாறு கூறினார். இந்த நிகழ்வில் இலவசமாக தென்னங்கன்றுகளும் வழங்கப்பட்டன.

(எ-6)

# தென்னை, வாழை மரங்களை துவம்சம் செய்த யானைகள்!

தம்பலகாமம், ஜூன் 24

திருகோணமலை - தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முள்ளிப்பொத்தானை நகருக்குள் நுழைந்த காட்டு யானைகள், பயன் தரக்கூடிய தென்னை, வாழை மரங்களை துவம்சம் செய்துள்ளதாக பிரதேச மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.



அருகில் ஈச்சம் குளம் உள்ள தால் அங்கிருந்து வருகை தரும் யானைக் கூட்டங்களே இவ்வாறு பயன்தரும் பல மரங்களை அழித்துவிட்டு செல்வதாக மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதனால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதோடு தாம் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக மக்கள் கூறினர்.

காட்டு யானைகளின் அச்சுறுத்தல்களால் இரவு நேரங்களில் நிம்மதியாக தூங்கமுடியவில்லை.

இரவு நேரங்களில் வெளியில் நடமாடுவதற்கும் அச்சமாகவுள்ளது. அத்தோடு, வீடுகளுக்குள் வைக்கப்படும் உணவுப் பொருட்களையும் யானைகள் எடுத்து உண்ணுகின்றன.

எனவே, காட்டு யானைகளால் ஏற்படும் பாதிப்புகளை கட்டுப்படுத்த அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை விரைந்து எடுக்க வேண்டும். எமக்கு நல்ல தீர்வைப் பெற்றுத் தரவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

# "புலம்பெயர்ந்த தொழிலாளர் போக்குவரத்துத் திட்டம்"

அம்பாறை, ஜூன் 24

"ஜெயகமு சிறீ லங்கா அம்பாறை" மாவட்ட அங்குரார்ப்பண நிகழ்ச்சித் திட்டம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை தொழில் மற்றும் வெளி நாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் அனுசரணையுடன் அம்பாறை எச். எம். வீரசிங்க மைதான வளாகத்தில் அமைச்சர் மனுஷ நாணயக்கார தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சித் தொடரின் முதற்கட்டமாக வெளிநாட்டில் பணிபுரிந்து இலங்கைக்கு வந்த தொழிலாளர்கள் மற்றும் வெளி நாட்டில் பணிபுரியும் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு நன்மைகள் வழங்கும் வகையில் "புலம்பெயர்ந்த தொழிலாளர் போக்குவரத்துத் திட்டம்" நடைபெற்றது. மேலும் சுயதொழில் மேம்பாட்டுக்கான மானியத்தின் முதற்கட்டமாக 19 புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு தலா 50,000 ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டது.

அத்துடன் வெளிநாட்டில் இருந்து நாடு திரும்பிய 08 மாற்றுத்திறனாளிகளுக்கு நிதியுதவி புலம்பெயர்ந்த தொழிலாளர் சமுதாயத்தைச் சேர்ந்த 240 குழந்தைகளுக்கு புலமைப்பரிசில் உதவித்தொகை , 520 சிறுவர்களுக்கு பாடசாலை உபகரணப் பைகள், 100 தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு ச. தொ. ச. வவுச்சர்கள் வழங்கப்பட்டன.



இதற்கு மேலதிகமாக, இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள வெளி நாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையங்கள் தொடர்பான ஆய்வுக்கூடங்களில் அமைச்சர் பங்கேற்று பல்வேறு ஆலோசனைகளையும் குறைநிறைகளையும் கேட்டறிந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் வெளி நாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் ஜகத் புஸ்பகுமார, முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் தயா கமகே உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (எ)

# சமூக சேவைகளை முன்னெடுத்த அமைப்புகள் பாராட்டி கௌரவிப்பு

நிந்தவூர், ஜூன் 24

நிந்தவூர் ரோஸ் றீனா நிறுவனத்தின் சமூக சேவைப் பிரிவின் ஏற்பாட்டில் அர்ப்பணிப்பு மிக்க சேவைகளை சமூகத்துக்காக முன்னெடுத்த அமைப்புகளை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு சனிக்கிழமை நிந்தவூர் அழகாபுரி தனியார் விடுதியில் இடம்பெற்றது.



ரோஸ் றீனா சமூக சேவைகள் அமைப்பின் ஸ்தாபகர் ஏ. ஜே. ஜனுபர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தேசிய எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் உறுப்பினர் எம். ஐ. அமீர், பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார். (எ)

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தால் அம்பாறையில் ஊடக மன்றம் அமைப்பு

அம்பாறை, ஜூன் 24

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தால் அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு இடையே பரஸ்பர ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கில் ஊடக மன்றத்தை ஸ்தாபிக்கும் நிகழ்வு அம்பாறையில் உள்ள விடுதியில் நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார மற்றும் இராஜாங்க அமைச்சர் ஜகத் புஸ்பகுமார ஆகியோர் தலைமையில் இடம்பெற்றது.

இவ்வாறான ஊடக மன்றங்களை அமைக்கும் பணிகள் குருநாகல, அநுராதபுரம், மொனராகலை, கேகாலை, கண்டி, மாத்தளை, பொலநறுவ, வவுனியா, கம்பஹா, மன்னார், இரத்தினபுரி, நுவரெலியா, பதுளை, திருகோணமலை, மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் நிறைவடைந்துள்ளன.

(எ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செஞ்சிலுவை சங்கம் அருகே அடுத்தடுத்து தாக்குதல்கள்

## காஸாவில் தொடரும் சோகம்

காஸா, ஜுன் 24

காஸாவில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைமை அலுவலகத்துக்கு அருகில் உள்ள கூடார முகாம்மீது இஸ்ரேலிய படையினர் மேற்கொண்ட தாக்குதலில் 25 இற்கும் அதிகமான பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர்.

இரண்டு தடவைகள் இவ்வாறு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக தாக்குதலில் தனது கணவரை இழந்த பெண் கூறினார்.

முதல் தாக்குதலை தொடர்ந்து பாரிய சத்தம் கேட்டது. வெளிச்சம் வெளிவந்தது இதனைத் தொடர்ந்து என்ன நடக்கின்றது எனப் பார்ப்பதற்காக ஏனையவர்கள் சென்ற வேளை இரண்டாவது தாக்குதல் இடம்பெற்றது.

நாங்கள் முகாம்களுக்குள் இருந்தோம் அவ்வேளை அவர்கள் செஞ்சிலுவை சங்கத்துக்கு அருகில் உள்ள கூடாரங்கள் மீது குண்டுத் தாக்குதலை மேற்கொண்டனர். அப்போது, எனது கணவர் வெளியே சென்றார் என கான்யூனிஸ் மருத்துவமனைக்கு அருகில் வைத்து அந்தப் பெண் தெரிவித்தார்.

அதன் பின்னர் அவர்கள் இரண்டாவது தாக்குதலை மேற்கொண்டனர். செஞ்சிலுவை சங்கத்தின் அலுவலக வாயிலுக்கு அருகில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றது என்றும் அந்தப் பெண் குறிப்பிட்டார்.

முதல் தாக்குதல் காரணமாக பதற்றமடைந்த மக்களுக்கு உதவிக்கொண்டிருந்த தனது இரண்டு மகன்கள் கொல்லப்பட்டுவிட்டனர் என ஹசான் அல் நஜாய் தெரிவித்தார்.

பெண்களும் குழந்தைகளும் அலறியதைத் தொடர்ந்து எனது மகன்கள் அவர்களைக் காப்பாற்ற விரைந்தனர் எனவும் அவர் கூறினார். (எ)

# இஸ்ரேலின் தாக்குதலில் சிக்கி காஸாவில் 42 பேர் உயிரிழப்பு!

காஸா முனை, ஜுன் 24

காஸா முனையின் ரபாவில் உள்ள ஷதி அகதிகள் முகாம் மற்றும் தபா ஆகிய பகுதிகளில் இஸ்ரேல் படையினர் மேற்கொண்ட கொடூரத் தாக்குதலில் சிக்கி ஷதி முகாமில் 24 பேரும், தபா நகரில் 18 பேரும் உயிரிழந்தனர்.

காஸா முனையில் செயல்பட்டு வரும் ஹமாஸ் போராளிகள் கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 7 ஆம் தேதி இஸ்ரேலுக்குள் நுழைந்து பயங்கரவாதத் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர்.

மேலும், இஸ்ரேலில் இருந்து 251 பேரை பணயக் கைதிகளாக காஸா முனைக்கு ஹமாஸ் அமைப்பினர் கடத்திச் சென்றனர். இதனையடுத்து ஹமாஸ் மீது போர் அறிவித்த இஸ்ரேல் ஒப்பந்த அடிப்படையில் பணயக் கைதிகள் 100 இற்கும் மேற்பட்டோரை மீட்டுள்ளது. மேலும், காஸா முனையின் நஸ்ரத் அகதிகள் முகாமில் அடைத்து வைக்கப்பட்டிருந்த 4 பணயக் கைதிகளையும் அண்மையில் இஸ்ரேல் அதிரடியாக மீட்டது.



ஆனால், 116 பேர் இன்னும் பணயக் கைதிகளாக ஹமாஸ் பிடியில் உள்ளதாகவும், அதில் சிலர் உயிரிழந்திருக்கலாம் எனவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது. மேலும், காஸாவில் இஸ்ரேல் அதிரடி தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த போரில் காஸாவில் ஹமாஸ் குழுவினர் உட்பட 37 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். அதே போன்று மேற்கு கரையில் ஏற்பட்ட மோதலில் 500 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். காஸா முனையில் இஸ்ரேல் படையினரும் 300இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இவ்வாறு இரு தரப்பிலும் நாளுக்கு நாள் உயிரிழப்புகள் அதிகரித்து வருகின்றன. அத்தோடு பொது மக்களும் கொன்று குவிக்கப்பட்டு வருகின்றனர். (எ)

# தாய்வானின் சுதந்திரத்துக்கு உதவினால் மரண தண்டனை

## சீனா கடும் எச்சரிக்கை

பீஜிங், ஜுன் 24

தாய்வானின் சுதந்திரத்துக்காக தீவிரமாக குரல்கொடுப்பவர்கள், முயற்சி செய்பவர்களுக்கு - பிரிவினைவாதிகளுக்கு மரண தண்டனை விதிக்கப்படும் என்று சீனா கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சீனாவின் நீதிமன்றங்கள், சட்டத்தரணிகள், பொது மற்றும் அரச பாதுகாப்பு அமைப்புகள் நாட்டைத் துண்டாடுவதற்காக தாய்வானின் சுதந்திரத்துக்காக குரல்கொடுக்கும் தீவிர பிரிவினைவாதிகளை தண்டிக்க வேண்டும் என்ற புதிய வழிகாட்டுதல்கள் வெளியாகியுள்ளன என ஜிங்குவா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த அறிவிப்பு நாட்டுக்கும் மக்களுக்கும் கடும் தீங்கு விளைவிக்கும், சுதந்திர முயற்சிகளின் தலைவர்களுக்கு மரண தண்டனையை விதிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளது என ஜிங்வா சுட்டிக்காட்டியுள்ளது.

தாய்வானின் சுதந்திரத்துக்காக குரல்கொடுக்கும் ஏனையவர்களுக்கு பத்து வருடங்கள் சிறைத் தண்டனை முதல் ஆயுள் தண்டனை வரை விதிக்கப்படலாம்.

ஏற்கனவே சீனாவின் சட்டத்தில் காணப்படும் விடயங்களின் அடிப்படையிலேயே புதிய உத்தரவுகள் வெளியாகியுள்ளன.

தாய்வான் பிரிவினையை அறிவித்தாலோ அல்லது அதற்கான முயற்சிகளை மேற்கொண்டாலோ அதற்கு எதிராக இராணுவ நடவடிக்கையில் ஈடுபடுவதற்கான அடிப்படையை இந்த புதிய உத்தரவுகள் சீனாவுக்கு வழங்கியுள்ளன. (எ)


# குடியிருப்புக்குள் விழுந்த ரொக்கெட் பாகம்

பீஜிங், ஜுன் 24

சீனாவும் பிரான்ஸும் இணைந்து லாங் மார்ச் 2 சி என்ற ரொக்கெட்டை விண்ணில் ஏவியது.

சீனாவின் சிச்சாங் ரொக்கெட் ஏவுதளத்தில் இருந்து இந்த ரொக்கெட் விண்ணில் ஏவப்பட்டது. விண்ணில் ஏவப்பட்ட சிறிது நேரத்தில் இந்த ரொக்கெட்டில் கோளாறு ஏற்பட்டது. ரொக்கெட்டில் இருந்த பூஸ்டர் எனப்படும் கருவி கட்டுப்பாட்டை இழந்து குடியிருப்புப் பகுதிக்குள் விழுந்து வெடித்தது. முன்னதாக பூஸ்டர் கருவி பூமியை நோக்கி வருவதை பார்த்த மக்கள் அலறியடித்து ஓடினர்.

ரொக்கெட் பாகம் வெடித்ததில் அதிர்ஷ்டவசமாக யாருக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. ரொக்கெட் பாகம் பூமியில் விழுந்த வீடியோ சமூக வலைத்தளங்களில் பரவி வருகிறது. ரொக்கெட்டின் பாகம் பூமியில் விழுந்து வெடித்த போதிலும் ரொக்கெட் திட்டம் வெற்றியடைந்ததாக சீனா அறிவித்துள்ளது. (எ)



# தஜிகிஸ்தானில் ஹிஜாப் அணிய தடை



துசான்பே, ஜுன் 24

மத்திய ஆசிய நாடான தஜிகிஸ்தானில் பெண்கள் ஹிஜாப் அணியத் தடை உள்ளிட்ட பல்வேறு சட்டங்களுக்கு அந்த நாட்டு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

1991 ஆம் ஆண்டு சோவியத் யூனியன் உடைந்தபோது தஜிகிஸ்தான் நாடு உருவானது. இந்த நாட்டில் 96 சதவீதம் பேர் இஸ்லாமியர்களாக உள்ளனர். இந்த நிலையில், தஜிகிஸ்தான் அரசு கல்வித் துறை, கடந்த 2007ஆம் ஆண்டு இஸ்லாமிய மற்றும் மேற்கத்திய உடைகள் ஆகியவற்றை மாணவர்கள் அணிவதற்குத் தடை விதித்தது. அப்போதுமுதலே ஹிஜாப் மீதும் நடவடிக்கை எடுக்கத் தொடங்கியது.

அந்த வகையில், தஜிகிஸ்தான் நாட்டில் தற்போது பெண்கள் ஹிஜாப் அணியவும் முக்கியமான பண்டிகைகளைக் கொண்டாடவும் தடை உள்ளிட்ட பல்வேறு சட்டங்களுக்கு அரசு ஒப்புதல் அளித்தது. தடையை மீறி பெண்கள் ஹிஜாப் அணிந்தால் இந்திய மதிப்பில் 20 இலட்சம் ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படும் என அரசு எச்சரித்துள்ளது.

இதேவேளை, முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் கொசோவோ, அஜர்பைஜான், கஜகஸ்தான் மற்றும் கிர்கிஸ்தான் உள்ளிட்ட நாடுகளில் பாடசாலை, பல்கலைக்கழக மாணவிகள், அரசாங்க அதிகாரிகள் புர்கா மற்றும் ஹிஜாபை அணியத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

# கருக்கலைப்பு சட்டத்துக்கு ஐக்கிய அமீரகம் அனுமதி

அபுதாபி, ஜுன் 24

கருக்கலைப்பு சட்டத்துக்கு அனுமதி வழங்கி ஐக்கிய அரபு அமீரகத்தின் அமைச்சரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு அமீரகத்தின் அமைச்சரவையில், பாலியல் வன்கொடுமை சம்பவங்களில் பாதிக்கப்பட்ட பெண்கள் கருக்கலைப்பு செய்து கொள்ள அனுமதி வழங்கும் சட்டத்துக்கு ஒப்புதல் வழங்கித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. பாலியல் வன்கொடுமை சம்பவம் தொடர்பாக உடனடியாக முறைப்பாடு செய்யப்பட வேண்டும் எனவும், கர்ப்பமாகி 120 நாட்களுக்குள் கருக்கலைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் இந்தச் சட்டம் கூறுகிறது.

கட்டாய பாலியல் உறவுக்கு ஆளாகி கர்ப்பமான பெண்கள் மற்றும் குடும்ப உறுப்பினரால் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கர்ப்பமான பெண்கள் ஆகியோருக்கு இந்தச் சட்டம் பொருந்தும் எனக் கூறப்பட்டுள்ளது. இந்தச் சட்டம் அமெரிக்காவின் 9 மாகாணங்களில் உள்ளதை விட தாராளமயமாக்கப்பட்டு இருப்பதாக கூறப்படுகிறது. முன்னதாக கருக்கலைப்புக்கான பெண்களின் தனிப்பட்ட சட்ட உரிமையை அமெரிக்க உச்ச நீதிமன்றம் கடந்த 2022 ஆம் ஆண்டு இரத்து செய்தது குறிப்பிடத்தக்கது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கடற்படையை வலுப்படுத்தும் இந்தியா!

## கப்பலையும் வழங்கி உதிரிப் பாகங்கள் உள்ளிட்ட உதவிகளையும் தொடர்கிறது

**கொழும்பு, ஜூன் 24**

**இலங்கைக் கடற்படையை வலுப்படுத்தும் நோக்கில் கடலோரக் காவல்படை கப்பலான சுரக்ஷாவுக்கு 1.2 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான அத்தியாவசிய உதிரிப் பாகங்களை இந்தியக் கடற்படை வழங்கியுள்ளது.**




இந்திய கடலோரக் காவல் படையின் ரோந்துக் கப்பலான சாசெட் இரண்டு நாள் பயணமாக கடந்த 19 ஆம் திகதியன்று கொழும்பை வந்தடைந்த நிலையில் இலங்கையிலிருந்து கடந்த 21 ஆம் திகதி மீண்டும் இந்தியா புறப்பட்டுள்ளது. இந்தக் கப்பலில் 1. 2 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான அத்தியாவசிய உதிரிப் பாகங்கள் இலங்கை கடலோரக் காவல்படையின் கப்பலான சுரக்ஷாவுக்கு இலவசமாகக் கொண்டு வந்துள்ளது.

இந்திய கடலோரக் காவல் படையின் கட்டளை அதிகாரி ஆர். ராஜேஷ் நம்பிராஜ், இலங்கைக் கடற்படையின் மேற்கு கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் டி. எஸ். கே. பெரேரா மற்றும் இலங்கை கரையோர கடற்படையின் பணிப்பாளர் நாயகம் ரியர் அட்மிரல் பூஜித விதான ஆகியோரை சந்தித்தார்.

இதன்போது, இந்திய கடலோர காவல்படை கப்பலில் கொண்டுவரப்பட்ட உதிரிப் பாகங்கள் ஒப்படைக்கப்பட்டன. இதில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமால் குணரத்ன (ஓய்வு), கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா, மேற்கு கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் டி. எஸ். கே. பெரேரா, இலங்கைக் கடலோரக் காவல் படையின் பணிப்பாளர் நாயகம் ரியர் அட்மிரல் பூஜித விதான மற்றும் சிரேஷ்ட கடலோர காவல்படை மற்றும் கடற்படை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

எஸ். எல். சி. ஜி. எஸ் சுரக்ஷா கப்பலானது கடந்த 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இந்திய அரசாங்கத்தால் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட ஒரு கடல் ரோந்துக் கப்பலாகும். முன்னதாக ஜூன் 2021 மற்றும் ஏப்ரல் 2022 இல் இந்தியா சுரக்ஷா கப்பலுக்கான உதிரிப் பாகங்களை நன்கொடையாக வழங்கியது. ஜனவரி 2024 இல் ஹாலோன் சிலிண்டர்களை மீண்டும் நிரப்புவதற்கான உதவியையும் வழங்கியது. இந்த செயல்பாடானது, பிராந்தியத்தில் கடல்சார் பாதுகாப்பின் பகிரப்பட்ட சவால்களை எதிர்கொள்ளும் திறனை வளர்ப்பதற்கு ஆதரவளிப்பதற்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை இது அடையாளப்படுத்துகிறது. (எ)



# மரம் வீழ்ந்ததால் மலையக ரயில் சேவை தடைப்பட்டது

நாவலப்பிட்டி, ஜூன் 24

மலையக ரயில் மார்க்கத்தில் பாரிய மரம் ஒன்று வீழ்ந்துள்ளதால் மலையக ரயில் சேவை தடைப்பட்டுள்ளதாக நாவலப்பிட்டி ரயில்வே கட்டுப்பாட்டு அறை அறிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்றதாக ரயில்வே கட்டுப்பாட்டு அறை தெரிவித்துள்ளது.

இதனால் மலையக ரயில் சேவை தடைப்பட்டுள்ளதாகவும் ரயில் பாதையில் விழுந்த மரத்தை அகற்றும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மலையக ரயில் சேவை தாமதமாகலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# போதைப்பொருளுடன் 536 பேர் கைதாகினர்

கொழும்பு, ஜூன் 24

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது போதைப் பொருட்களுடன் 4 பெண்களும் 532 ஆண்களும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 17 பேர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நிலையில், போதைப் பொருட்களுக்கு அடிமையாகியுள்ள 17 பேரை புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து ஹெரோயின், ஐஸ், கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (எ)

# மரக்கறிகளின் விலை சடுதியாக அதிகரிப்பு


கொழும்பு, ஜூன் 24

நாட்டின் பல பகுதிகளில் கடந்த காலங்களில் பெய்த கடும் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளம் உள்ளிட்ட அழிவுகளால் மரக்கறிகளின் விலை திடீரென அதிகரித்துள்ளது.

மரக்கறி விற்பனை நிலையங்களில் ஒரு கிலோ கிராம் போஞ்சியின் மொத்த விற்பனை விலை 550 முதல் 750 ரூபாய் வரையிலும், ஒரு கிலோ கிராம் கறி மிளகாய் 500 முதல் 650 ரூபாய் வரையிலும், ஒரு கிலோ கிராம் பச்சை மிளகாய் 350 முதல் 500 ரூபாய் வரையிலும் உயர்ந்துள்ளதுடன் ஏனைய மரக்கறி வகைகள் அதிகளவில் உயர்ந்த நிலையில் உள்ளதாக நுகர்வோர் கவலை வெளியிட்டுள்ளனர்.

அத்துடன், ஒரு கிலோ கிராம் கரட் 460 ரூபாய்க்கும், ஒரு கிலோ கிராம் வெண்டைக்காய் 500 ரூபாய்க்கும், இஞ்சி ஒரு கிலோ 3,500 ரூபாய்க்கும், தேசிக்காய் ஒரு கிலோ 1,800 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

இதன்படி, கடந்த சில நாட்களுக்கு முன்பு 100 ரூபாய்க்கு குறைவாக விற்பனை செய்யப்பட்ட மரக்கறிகள் இன்று 300



முதல் 500 ரூபாயைக் கடந்துள்ளதாக வியாபாரிகள் கூறினர்.

கடந்த காலங்களில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக பயிர்கள் சேதமடைந்துள்ளதால் மரக்கறிகளின் விலைகள் இவ்வாறு அதிகரித்துள்ளதாக அவர்கள் குறிப்பிட்டனர்.

மேலும், சீரற்ற காலநிலை காரணமாக தற்போது மரக்கறிகள் நுகர்வோரின் தேவைக்கு ஏற்ற வகையில் வரத்து இல்லாததால் காய்கறிகளின் விலைகள் மேலும் உயர்ந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# 16 வயது சிறுமி பாலியல் துஷ்பிரயோகம் ஆறு இளைஞர்கள் பொலிஸாரால் கைது

கொழும்பு, ஜூன் 24

16 வயது பாடசாலை மாணவியைக் கடத்திச் சென்று கூட்டுப் பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் 6 இளைஞர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் நேற்றுக் காலை சட்டத்தரணி ஒருவருடன் வந்து ஹங்வெல்ல பொலிஸில் சரணடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதன் பின்னர் அவருடன் சென்று சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்திய ஏனைய ஐந்து சந்தேக நபர்களும் குற்றப் விசாரணை பணியக அதிகாரிகள் குழுவினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில், பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு சிறுமியின் காதலனுக்கு தொலைபேசியில் தகவல் தெரிவிக்கப்பட்ட போதும் அவர் அதைத் தவிர்த்ததால் பின்னர் அவரையும் பொலிஸார் கைது செய்தனர்.

சந்தேகநபர்கள் 19 மற்றும் 21 வயதுடையவர்கள் எனவும் அவர்களில் ஒருவர் திருமணமானவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உளவு பார்த்த நபரை கைது செய்யவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்துக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் ரேணுகா ஜயசுந்தரவின் பணிப்புரையின் பேரில் மற்றுமொரு பொலிஸ் குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

குறித்த சிறுமி கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் அவரது காதலன் மற்றும் அவரது நண்பர்கள் குழுவினால் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளானதும் தெரியவந்துள்ளது. இதன்படி, சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (எ)

# சத்துரங்கவின் நெருங்கிய நண்பர் ஐஸ் போதைப்பொருளுடன் கைது

கொழும்பு, ஜூன் 24

டுபாயில் உள்ள பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த போதைப்பொருள் கடத்தல்காரனான வாழைத்தோட்டம் தெனுவன் சத்துரங்க என்பவரின் நெருங்கிய நண்பர் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் கொழும்பு 12 பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயது இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான 20 கிராம் 900 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் போதைப்பொருள் விற்பனையில் கிடைத்ததாகக் கூறப்படும் 3 இலட்சம் ரூபாய் பணம் உள்ளிட்டவை கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக வாழைத்தோட்டம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலிகள் மீதான தடையை நீக்க...

கட்டமைப்பு இயங்கு நிலையிலேயே உள்ளது. அந்த அமைப்பு செயலற்ற நிலையில் இருந்தாலும் அதன் இராணுவ பிரிவை மீண்டும் செயல்படுத்தக்கூடும். விடுதலைப் புலிகள்மீதான தொடர்ச்சியான தடை பயங்கரவாதத்துக்கு எதிரான உலகளாவிய போராட்டத்துக்கு ஆதரவளிக்கவும் - இங்கிலாந்து நாட்டவர்களை பாதுகாப்பதற்குமான தேவையுடன் ஒத்துப் போகிறது என்று பிரிட்டன் தெரிவித்துள்ளது.

பிரித்தானியாவில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் 2001 மார்ச் 29ஆம் திகதி அன்றைய இராஜாங்க செயலாளரால் விடுதலைப் புலிகள் அமைப்பு தடை செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அந்தத் தடையை நீக்க பலமுறை முயற்சிகள் எடுக்கப்பட்டன. இறுதியாக கடந்த 2018 டிசெம்பரில் தடையை நீக்கக் கோரிக்கை விடுக்கப்பட்டது. எனினும், 2019ஆம் ஆண்டில் இந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## யாழ்...

தெரியாத நிலையில் நேற்று பொலிஸ் நிலையத்தில் தஞ்சமடைந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

சிறுவன் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் மேல திக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## அதானி...

உயர் அதிகாரி ஒருவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தில் மின்சாரம் கொள்வனவு தொடர்பாக இலங்கை மின்சார சபைக்கும் அதானி நிறுவனத் துக்கும் இடையிலான ஒப்பந்தத்தின் அடிப்படைத் தகவல்களை வழங்குமாறு மின்சார சபைக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் அது தொடர்பான தகவல்கள் கிடைக்கவில்லை எனவும் அந்தத் தகவலின்றி திட்டத்தை ஆராய முடி யாது என்றும் அந்த அதிகாரி தெரி வித்தார்.

தாங்கள் கோரும் தகவல் மின்சார சபையிடம் இல்லாமல் மன்னார் மற்றும் பூநகரி காற்றாலை மின் நிலையங்களுக்கு மின்சார சட்டத்தின் கீழ் அங்கீகாரம் வழங்க முடியாது என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார். (ஐ)

## ஆசிரியர்...

கருத்து வெளியிட்ட அவர்,

நாடளாவிய ரீதியில் வரும் புதன் கிழமை (நாளை மறுதினம்) சுகயீன விடுமுறையை அறிவித்து தொழில்சங்க நடவடிக்கையில் ஈடுபட இலங்கை ஆசிரியர் சங்கம் முடிவெடுத்துள்ளது.

நாடளாவிய ரீதியில் அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்கு தீர்வை கோரியும் பெற்றோர்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள சுமைகள் மற்றும் மாணவர்களுடைய போசாக்கு பிரச்னைகள் ஆகிய கோரிக்கைகளை உள்வாங்கியுமே இந்தப் போராட்டம் நடைபெறவுள்ளது.

ஆகையால் எந்த அச்சமும் இன்றி அனைத்து அதிபர்கள், ஆசிரியர்களும் இந்தத் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட வேண்டும். தொழிற்சங்க நடவடிக்கைக்கு ஏதேனும் இடையூறுகள் ஏற்படுமிடத்து அதற்கு எதிரான நடவடிக்கைகளை ஆசிரியர் சங்கம் நிச்சயம் எடுக்கும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## புலிகள்...

மேலும், தடை செய்யப்பட்ட அமைப்புகளின் மேல்முறையீட்டு ஆணையம் என்பது பிரித்தானிய பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட சுயாதீனமான நீதிமன்றம். ஓய்வுபெற்ற மூத்த உயர்நீதிமன்ற நீதிபதிகளே இந்த தீர்ப்பை வழங்கியுள்ளனர்.

தமிழீழம் என்ற தனிநாட்டு கோரிக்கைக்கு ஆதரவு வழங்குகின்ற நாடு கடந்த தமிழீழ அரசாங்கமே தடையை நீக்குமாறு கோரியது. எனினும், நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் ஐக்கிய இராச்சியத்தில் தடை செய்யப்படவில்லை.

சர்வதேச நாடுகள், தமிழீழ விடுதலைப் புலிகள்மீதான தடையை நீக்கச் செய்வதன் மூலம் தாங்கள் மீண்டும் புத்துணர்வை பெறும் நிலையை உருவாக்குவதே விடுதலை புலிகளின் சர்வதேச வலையமைப்பு கொண்டுள்ள மூலோபாய அணுகுமுறை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## ஐ.எம்.எவ்வின்...

ரணிலுடன் இணைவார். அவர் தவிர சிறீ லங்கா சுதந்திர கட்சியை சேர்ந்த மேலும் சிலரும் ஜனாதிபதிக்கு ஆதரவ ளிப்பர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொதுஜன பெரமுனவின் கட்சியின் சார்பில் பங்கேற்காமல் சுயாதீன பொது வேட்பாளராகவே களமிறங்குவார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## இன்று...

கல்வி அமைச்சு இந்த விசேட அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

சம்பள முரண்பாட்டுக்கு தீர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தே இன்றும் நாளையும் சுகயீன விடுமுறை போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக கல்வி சாரா ஊழியர்கள் சங்கத்தின் செயலாளர் அஜித் கே திலகரத்ன நேற்று கண்டியில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

நாடு முழுவதும் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கல்வி சாரா ஊழியர்கள் உள்ளனர். இந்த நிலையில் தாம் முன்வைத்த 80இற்கும் மேற்பட்ட கோரிக்கைகளை அரசாங்கம் கணக்கில் எடுக்கவில்லை. எனவேதான தாம் தமது பிரச்னைகளுக்கு தீர்வு கோரி சுகயீன விடுமுறை போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

## தமிழ்நாட்டின்...

இலங்கையின் இறையாண்மைக்கு பெரும் பிரச்னைகள் ஏற்படக்கூடும். இவ்வாறு பாலம் அமைப்பதன் ஊடாக 2 ஆயிரம் வருடங்களாக பாதுகாக்கப்பட்ட சுதந்திரம் இல்லாமல் போகக் கூடும்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே பாலம் அமைப்பதன் மூலம் தமிழ்நாட்டின் ஒரு பகுதியாக இலங்கை மாறிவிடும். அரசாங்கம் முன்மொழிந்துள்ள இந்த பாலம் அமைக்கும் திட்டத்தை தாம் முற்றிலும் எதிர்ப்பதாகவும் இந்தியர்களும் இதனை எதிர்க்க வேண்டும் - என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

## ஐ.தே.கூட்டணி...

கட்சி, ஜனநாயக போராளிகள் கட்சிகள் ஏற்கனவே வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்த தனித்தனியாக தமது ஏற்கனவே ஆதரவை அறிவித்து விட்டன. இந்த நிலையிலேயே கூட்டணியாகக் கூடி அவை ஆராயவுள்ளன.

இதன்போது, தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் அடுத்த கட்டமாக முன்னெடுக்கப்பட வேண்டிய விடயங்கள், மற்றும் சிவில் அமைப்புகளின் ஒன்றிணைந்த அமைப்பான 'தமிழ் மக்கள் பொதுச்சபை'யுடன் இணைந்து பணியாற்றுவது தொடர்பிலும் கலந்துரையாடப்படும் என்று அறிய வருகின்றது.

தமிழ் மக்கள் பொதுச் சபை ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்வதற்காக பொதுக் கட்டமைப்பை நிறுவ நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ள நிலையில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் இன்றைய [illegible] பெறுகிறது. (ஐ)

# ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவேன் தமிழ்க் கட்சிகளுடன் விரைவில் பேச்சு!

### நீதி அமைச்சர் விஜயதாஸ சொல்கிறார்

கொழும்பு, ஜூன் 24

சிறீ லங்கா சுதந்திரக்கட்சி என்ற அடையாளம் கிடைக்காது விட்டாலும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நான் நிச்சயம் போட்டியிடுவேன் - என்று நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



அத்துடன், வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுடன் ஏற்கனவே உரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் அந்த மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ் அரசியல் தரப்புகளுடன் விரைவில் பேச்சுகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சிறீ லங்கா சுதந்திரகட்சியின் தவிசாளராக செயல்படுவதற்கு நீதிமன்றம் தடைகளை விதித்துள்ள நிலையில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது பற்றி வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் தவிசாளர் பதவியை ஏற்றமைக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. குறித்த விடயத்தை நீதிமன்றத்தின் ஊடாக நிறைவுக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம்.

சிறீ லங்கா சுதந்திரகட்சியின் பெயர்ப் பலகையை மட்டும் சிலர் வைத்திருகின்றார்கள். ஆனால், சிறீ லங்கா சுதந்திர கட்சி என்ற பேருந்து எனது கையில்தான் உள்ளது. ஆகவே அந்தக் கட்சியின் வழக்கு விவகாரங்கள் எமது பயணத்தை தடுத்து நிறுத்திவிடமுடியாது.

இதேநேரம், வடக்கு, கிழக்கு மக்களுடன் உரையாடல்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. இந்நிலையில் விரைவில் அம்மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் கட்சிகளுடன் உரையாடல்களை மேற்கொள்ளவுள்ளேன். - என்றார். (ஐ)

# ஊழியர் சேமலாப நிதி செலுத்தாத நிறுவனங்கள்மீது 15,000 வழக்குகள்!

கொழும்பு, ஜூன் 24

ஊழியர் சேமலாப நிதியை செலுத்தத் தவறிய நிறுவனங்களுக்கு எதிராக சுமார் 15 ஆயிரம் வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன என்று அரசாங்க பொதுக் கணக்குகளுக்கான குழு வெளிப்படுத்தியது.

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் 2021, 2022ஆம் ஆண்டுகளுக்கான தொழிலாளர் திணைக்களத்தின் செயல்பாடுகளை ஆய்வு செய்வதற்காக பாராளுமன்றத்தில் நடைபெற்ற பொதுக் கணக்குகளுக்கான குழுவின் கூட்டத்தின் போது இந்த தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இதில் 31 டிசெம்பர் 2021இல் கிட்டத்தட்ட 5 ஆயிரம் வழக்குகள் முன்னெடுக்கப்பட முடியாத தேக்க நிலைமைக்கு உள்ளாகியுள்ளன. குறிப்பாக, பதிவு செய்யப்பட்ட முகவரிகளில் நிறுவனங்கள் செயல்படாமை அல்லது நிறுவனங்கள் பணிப்பாளர்கள் அல்லது உரிமையாளர்கள் வெளிநாடுகளில் இருக்கின்றமை, நிறுவனங்கள் முழுமையாக நாட்டைவிட்டு வெளியேறுதல் போன்ற காரணிகள் வழக்குகள் தேக்கமடைவதற்கு காரணமாக அமைந்துள்ளன.

இதேநேரம், அனைத்து மாவட்டங்களிலும் உள்ள ஊழியர் சேமலாப நிதிக் கட்டமைப்புக்களுக்கு குறித்த நிதியை செலுத்துவதற்கு தவறிய உரிமையாளர்கள் பற்றிய விரிவான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பொதுக் கணக்குகளுக்கான குழு உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## உருக்குலைந்த...

உள்ளார். அவர் தற்போது வெளி நாட்டில் உள்ளார் என்று கூறப்படுகிறது. அவர் வெளிநாடு சென்றது தாயாருக்கு பிடிக்கவில்லை. இதனால் கடந்த சில வருடங்களாக இருவரும் பேசவில்லை என்று அயலவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், கணவரும் குடும்பத்தைப் பிரிந்து வவுனியாவில் வசித்து வருகிறார். இந்த நிலையில், வெளிநாட்டிலுள்ள மகள் பற்றிய தகவல் இல்லாத நிலையில் அது குறித்து விசாரிப்பதற்காக கடந்த 14ஆம் திகதி கொழும்பு சென்று தூதரகம் ஒன்றுக்கு சென்று விசாரித்து விட்டு, 15ஆம் திகதி அதிகாலையில் வீடு திரும்பியுள்ளார். அவர் வீட்டுக்குள் வந்து, பயணப் பொதியை வைத்து விட்டு குளியலறைக்கு சென்ற போது விழுந்து உயிரிழந்திருக்கலாமென கருதப்படுகிறது. குளியலறை வாசலில் அவரின் சடலம் காணப்பட்டது.

வீட்டில் இருந்து துர்நாற்றம் வீசுவதாக அயலவர்கள் கிராம சேவக ருக்கு அறிவித்ததை தொடர்ந்து, பருத்தித்துறை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. பருத்தித்துறை பொலிஸார் வீட்டுக்கு சென்றபோது, சடலம் உருக்குலைந்த நிலையில் காணப்பட்டது. அவரின் பயணப் பொதியில் இருந்த பணம் உள்ளிட்ட பொருட்கள் அப்படியே இருந்தன.

அதனால், இந்த மரணத்தில் குற்றச் சம்பவம் இல்லையென பொலிஸார் நம்புகிறார்கள். எனினும், மரணத்துக்கான காரணத்தை உறுதிப்படுத்த விசாரணைகள் தொடர்கின்றன. (ஐ)

## பொருளாதார...

ஓர் அங்கமாகும். நாட்டில் விளைச்சல் செய்யாத காணிகளே அதிகளவில் உள்ளன. இந்த நிலங்கள் அனைத்தும் விளைச்சலுக்கு பயன்படுத் தப்பட வேண்டும். அதனூடாக ஏற்று மதி விவசாயமாக கட்டமைக்க வேண் டும்.

இந்த நாட்டின் உணவு தேவைக்காக மட்டுமன்றி, மற்றைய நாடுகளின் உணவுத் தேவைக்காகவும் விவசாய உற்பத்திகளை ஏற்றுமதி செய்யத் தயாராக இருக்க வேண்டும். இதன் மூலம் அதிகளவில் வெளிநாட்டு வருமானத்தை ஈட்ட முடியும். வெளிநாடுகளில் இருந்து கடன் பெற வேண்டிய தேவையும் இருக்காது.

நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பவே இந்த நாட்டை நான் பொறுப்பேற்றேன். புதிய பொருளாதாரம் உருவாகும்போது, நாட்டின் விவசாயிகளுக்கும் நல்ல வருமானம் கிடைக்கும்.

அரசாங்கத்தின் காணிகளில் விவசாயம் செய்து வந்தவர்களுக்கு நிரந்தர காணி உறுதிகளை வழங்கியிருக்கிறோம்.

அடுத்த வருடத்துக்குள் அனைத்து விவசாய சேவை நிலையங்களையும் விவசாய நவீனமயமாக்கல் நிலையங்களாக மாற்ற திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் இந்நாட்டு விவசாயிகளின் வருமானத்தை படிப்படியாக அதிகரித்து, கிராமப் பகுதிகளும் வளர்ச்சியை எட்டும்" - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# ஆட்கடத்தலில் ஈடுபடுவோருக்கு 10 வருட சிறை; ரூ. 2 மில். அபராதம்!

கொழும்பு, ஜூன் 24

**ஆட்கடத்தலில் ஈடுபட்டனர் என்று குற்றம் நிரூபிக்கப்பட்டால் குற்றவாளிக்கு 5 முதல் 10 வருடங்கள் சிறைத்தண்டனையும் 20 இலடசம் ரூபாய் வரையிலான அபராதமும் விதிக்கப்படும் வகையில் சட்டம் விரைவில் அறிமுகமாகவுள்ளது.**

அரசாங்கத்தால் வெளியிடப்பட்டுள்ள புதிய குடிவரவு சட்ட மூலத்தின் கீழ் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாட்டுக்கு உள்ளே அல்லது வெளிநாட்டுக்கு ஆட்களை கடத்துவோருக்கு எதிராகவே இந்தத் தண்டனைகள் அறிமுகமாகவுள்ளன.

நிதி அல்லது பொருள் ஆதாயத்துக்காக நாட்டுக்குள் வெளிநாட்டவர்களை கடத்து வோர் அவர்களை மறைத்து வைக்க தங்குமிடம் வழங்குவோர், ஆட்கடத்தலுக்கு துணை நிற்போ ருக்கு இந்தத் தண்டனை பொருந் தும்.

சந்தேகநபர்கள் இழைத்த குற்றம் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டால், 5 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகள் வரையில் சிறைத்தண்டனை மற்றும் 10 இலட்சம் ரூபாய் வரை தண்டப்பணம் அறிவிடப்படும். இதேபோன்று, நிதி இலாபத்துக்காக இலங்கையர்களை நாட்டை விட்டு கடத்தினாலும் இதே தண்டனை பொருந்தும்.

சிறுவர் தொடர்பாக குற்றம் இழைக்கப்பட்டிருந்தால், குற்றவாளிகளுக்கு 8 முதல் 20 ஆண்டுகள் சிறையும் 20 இலட்சம் ரூபாய் தண்டப்பணமும் விதிக்கப்படும். (ஐ)

## குழந்தைக்கும் துன்புறுத்தல்; வவுனியாவில் ஒருவர் கைது!

வவுனியா, ஜூன் 24

3 வயது குழந்தையை பாலியல் ரீதியாக துன்புறுத்தினார் என்ற குற்றச்சாட்டில் வவுனியாவில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

வவுனியா, மகாறம்பைக்குளம் பொலிஸ் பிரிவை சேர்ந்த நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

பாதிக்கப்பட்ட குழந்தையின் தாயார் கூலித் தொழிலாளி. அவர் தனது குழந்தையை அயல் வீட்டில் விட்டு வேலைக்கு சென்றுள்ளார். அப்போதே, இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். பாதிக்கப்பட்ட குழந்தை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. (ஐ)

## கிளிநொச்சி விபத்தில் ஒருவர் காயமடைந்தார்



கிளிநொச்சி, ஜூன் 24

கிளிநொச்சி - கனகபுரம் வீதியில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் காயங்களுக்கு உள்ளானார்.

வேகமாக பயணித்த வாகனத்தில் ஏற்பட்ட திடீர் பழுது ஏற்பட்டதால் கெப் ரக வாகனம் விபத்துக்கு உள்ளானது. அந்த வாகனம் வீதியோரத்தில் இருந்த தொலைத்தொடர்பு தூண்களை மோதியது. இதில், அவை முறிவடைந்தன. இதனால், தொலைத் தொடர்பு வலையமைப்பு பாதிக்கப்பட்டது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகிறார்கள். (ஐ)

# 8 வருடங்களில் சிபெற்கோ 341 கோடி ரூபாயை இழந்தது

## திட்டமிட்டு நட்டம் ஏற்படுததியதை அம்பலப்படுத்தியது கோப் குழு!

கொழும்பு, ஜூன் 24

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு (சிபெற்கோ) 2014 முதல் 2022 வரையான காலத்தில் 341.6 கோடி ரூபாய் இழப்பீடு ஏற்பட்டுள்ளதாக பொது நிறுவனங்களுக்கான குழுவில் (கோப் குழு) வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்குள் நிலவும் நேர்மையின்மை, கூட்டுத்தாபனத்தின் சந்தைப்படுத்தல் திணைக்களத்தால் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களுக்கு உரிய சுற்றறிக்கை 8 வருடங்கள் வேண்டுமென்றே தாமதிக்கப்பட்டமையுமே இந்த நட்டத்துக்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

2022ஆம் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தற்போதைய நிலை குறித்தும் பொது நிறுவனங்கள் தொடர்பான குழு ஆராய்ந்தது. இதன்போதே மேற்படி விடயம் வெளிப்படுத்தப்பட்டது.

அத்துடன், மோசடியில் ஈடுபட்டவர்களின் பெயர் பட்டியல் மற்றும் அவர்களின் தவறான செயல்களுக்கு பொறுப்புக்கூறச் செய்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அடங்கிய அறிக்கையை ஏழு வேலை நாட்களுக்குள் தம்மிடம் சமர்ப்பிக்குமாறும் பொது நிறுவனங்கள் தொடர்பான குழு பணித்துள்ளது.

விநியோகஸ்தர்களுக்கு கூடுதலான தரகுப் பணத்தை செலுத்தியமையால் 3 ஆயிரத்து 100 கோடி ரூபாய் மேலதிக செலவீனம் ஏற்பட்டதோடு இதனை நிவர்த்தி செய்வதற்காக பொதுமக்கள் எரிபொருளுக்காக 1000 ரூபாய்க்கு மேல் செலுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2022ஆம் ஆண்டு அதிகமாகக் கொடுக்கப்பட்ட தரகு பணமானது விற்பனைச் செலவாகக் கணக்கிடப்பட்டதோடு அது வரவு தொகையாக உள்ளிடப்பட்டிருக்கவில்லை என்றும் கோப் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இதன்படி இந்த மேலதிக கொடுப்பனவுகளை மீளப்பெறுவதற்கு பொறுப்பான அதிகாரிகள் மற்றும் அது தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து குழு மேலும் கேட்டறிந்தது. இதற்குப் பொறுப்பான அதிகாரிகள் தற்போது நாட்டில் இல்லை எனவும் கோப் குழுவில் தெரியவந்துள்ளது.

அத்தோடு நிதி மோசடியில் ஈடுபட்டவர்களின் பெயர்ப் பட்டியலைக் கொண்ட விரிவான அறிக்கையை இரண்டு வாரங்களுக்குள் சமர்ப்பிக்குமாறும் உள்ளக விசாரணைகளுக்கு இணையாக விசாரணைகளுக்காக குற்றப்புலனாய்வு பிரிவினரிடம் முறைப்பாடு செய்யவும் பொது நிறுவனங்களுக்கான குழு உத்தரவிட்டுள்ளது. (ஐ)

## லண்டன் அனுப்புவதாகக் கூறி ரூ.80 இலட்சம் வாங்கியவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 24

லண்டனில் வேலை வாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞரிடம் 80 இலட்சம் ரூபாயை பெற்று மோசடி செய்த லண்டன் குடியுரிமை பெற்ற யாழ்ப்பாணத்தை சேர்ந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான நபர் அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்தவேளை, லண்டனில் உள்ள பல்பொருள் அங்காடியில் வேலை பெற்றுத் தருவதாக கூறி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞனிடம் 80 இலட்சம் ரூபாய் பணத்தைப் பெற்றுள்ளார்.

பணத்தை பெற்ற சந்தேக நபர், இளைஞனை லண்டனுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை எடுக்காததால், சந்தேகம் கொண்ட இளைஞன் தனது பணத்தை மீளத் தருமாறு கோரியுள்ளார்.

ஆனால், பணத்தை திரும்ப வழங்க அவர் மறுத்துள்ளார். இதையடுத்து பாதிக்கப்பட்ட இளைஞர் பொலிஸில் முறையிட்டார். இதையடுத்தே குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.

வெளிநாடுகளில் குடியுரிமை பெற்றவர்கள் வெளிநாடுகளில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி மோசடி செய்து வருகின்றனர் எனவும் இது தொடர்பில் இளைஞர், யுவதிகள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# 13ஆம் திருத்தச்சட்டம் தொடர்பாக சஜித், அநுர நாடகமாடுகின்றனர்!

## விஜயதாஸ ராஜபக்ஷ சாடல்



கொழும்பு, ஜூன் 24

வடக்குக்குச் சென்று 13ஆவது திருத்தச்சட்டம் சம்பந்தமாக பேசுவதற்கு ஜே. வி. பிக்கு அருகதையில்லை. இது போன்றே சஜித் பிரேமதாஸவும் 13 குறித்து நாடகமாடுகிறார் என்று நீதி சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ கூறியுள்ளார்.

அரசமைப்பில் உள்ள 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு தயார் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்கவும் வடக்கில் வைத்துத் தெரிவித்தனர்.

இது தொடர்பில் கருத்துரைத்த விஜயதாஸ ராஜபக்ஷ,

ஜனாதிபதித் தேர்தலுக்கான காலம் நெருங்கிக்கொண்டு இருக்கிறது. இந்தத் தருணத்தில்தான் வடக்கு, கிழக்கு மக்கள்மீது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்கவுக்கும் திடீர் கரிசனைகள் ஏற்பட்டுள்ளன.

இவர்கள் கடந்த காலத்தில் வடக்கு, கிழக்கு மக்கள் சம்பந்தமாக எந்தவிதமான கவனத்தையும் கொள்ளவில்லை. அந்த மக்களின் அன்றாட பிரச்னைகள் தொடர்பில் கூட திரும்பிப் பார்த்தது கிடையாது.

குறிப்பாக, ஜே. வி. பி. 13ஆவது திருத்தத்துக்கு எதிராக இதுவரையிலும் கடும் எதிர்ப்பையே வெளிப்படுத்தியது. இது நடைமுறைப் படுத்தக்கூடாது என்பதற்காக படுகொலைகளைக் கூடச் செய்தார்கள். 13ஆவது திருத்தச்சட்டம் சம்பந்தமாக பேச அவர்களுக்கு எந்தவிதமான அருகதையும் இல்லை.

இதேபோன்றுதான் சஜித் பிரேமதஸவும் 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைளின்போது எந்தவிதமான ஒத்துழைப்புகளையும் செய்யாதிருந்தனர். தேர்தல் நெருங்கிவரும் நேரத்தில் வடக்கு மக்களிடத்தில் சென்று 13ஆவது திருத்தச்சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதாகவும் அதுபற்றி உரையாடுவதாகவும் கூறுகிறார். இதுவொரு தேர்தல் கால ஏமாற்று நாடகம்.

சஜித்தையும் அநுரவையும் புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு தமிழ் மக்கள் முட்டாள்கள் அல்லர். இருவரும் தமது அரசியல் சுயலாபத்துக்காகவே இப்போது வடக்கு, கிழக்கு நோக்கி வருகின்றார்கள் என்பதை அந்த மக்கள் நன்கு அறிவார்கள் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.06.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.